Registered as a Newspaper

பக்கங்கள் 8

விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஐப்பசி 27 | 13-11-94 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 268

## தமிழீழ மீட்புநிதி கடன் 1200 பேருக்கு மீளளிப்பு

தமிழீழ மீட்புநிதிக்கு கடன் கொடுத்து உதவியவர்களில் 1994 மாவீரர் வாரத்தில மீளளிப்பதற்கென 1200 பேர் தேர்ந்து எடுக்கப்பட்டு அவர்களின் எண் பட்டியல் தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையினரால் வெளியிடப்பட்டுள்ளது 1993 - மார்கழி தொடக்கம் 1994 - கார்த்திகை வரையிலான காலப் பகுதிக்கு கடன் மீளளிப்பதற்கென (8ஆம் பக்கம் பார்க்க)



நேற்று நடந்த ஜனாதிபதி பதவி ஏற்பு வைபவத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கே.எச். ஜே. விஜேதாச அறிமுக உரை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும் திருமதி சந்திரிகா குமாரதுங்கா சத்தியப்பிரமாணம் செய்வதை இரண்டாவது படத்திலும், செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படப்பிடிப்பு: மணிவண்ணன்)

# புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை கைவிடுவதற்கு நியாயம் ஏதும் இல்லை!

## ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின் பத்திரிகையாளரிடம் சந்திரிகா

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. மக்களினால் அங்கீகரிக்கப்பட்ட சமாதான நடவடிக்கைகளை கைவிடுவதற்கு எந்தவித காரணமும் இல்லை எனவே சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்க சகல முயற்சிகளும் விரைவில் எடுக்கப்படும் என புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற பின் நடந்த முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டில் திருமதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் ஜனாதிபதியாக பதவியேற்ற இரண்டு மணித்தியாலங்களுக்குள் விசுறுபாயாவில் இந்த முதலாவது பத்திரிகையாளர் மகாநாடு நடைபெற்றது. அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், அரசின் சமாதான நடவடிக்கைகளை நாட்டிலுள்ள ஒவ்வொரு சமூகத்தினரும் அங்கீகரித்துள்ளார்கள் என்பதை ஜனாதிபதி தேர்தல் முடிவு தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. சிங்கள மக்களில் பெரும்பான்மையோரும் தங்களின் தெளிவான அங்கீகாரத்தை தெரிவித்துள்ளார்கள். வடபகுதியில் வாழும் தொண்ணூறு சதவீதமான மக்களும் கிழக்கில் வாழும் எண்பத்தியேழு சதவீதமான மக்களும் [8ஆம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதியாக சந்திரிகா நேற்றுக்காலை பதவிஏற்பு

### அணிவகுப்பு மரியாதையையும் ஏற்றார்

(கொழும்பு)

சிறிலங்காவின் நான்காவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக நேற்று திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா பிரதமநீதியரசர் ஜி பி எஸ். டி.சில்வா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். அவரது பதவிப் பிரமாண வைபவம் ஜனாதிபதி செயலகத்தில் காலை 11.00மணிக்கு இடம்பெற்றது அடுத்து சத்தியப் பிரமாணத்தை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து பதவிப்பிரமாண உரையை நிகழ்த்தியதுடன் காலிமுகத்திடலில் முப்படையினதும் அணிவகுப்புமரியாதையையும் ஏற்றுக் கொண்டார்.

திருமதி சந்திரிகா குமாரதுங்கா காலை 10-40 மணிக்கு ஜனாதிபதி செயலக வாசலை வந்தடைந்தார். அவருடன் முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், பிரதம நீதியரசர் ஆகியோர் காணப்பட்டனர். அத்தருணத்தில் ஜனாதிபதி செய [8ஆம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதி செயலாளராக பலபத்தபெண்டி நியமனம்

### உடன் பதவியேற்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க ஜனாதிபதியின் செயலாளராக கே. பலபத்தபென்டியை நியமித்துள்ளார். ஜனாதிபதியாகபதவிஏற்றபின் சந்திரிகா வழங்கிய முதல் நியமனம் இதுவாகும்.

ஜனாதிபதியாக திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா பதவி யேற்றுக் கொண்ட அதே வேளையில் ஜனாதிபதியின்செயலாளராக பலபத்த பெண்டியும் பதவி ஏற்றுக்கொண்டார். ஜனாதி [8ஆம் பக்கம் பார்க்க]

## ஐக்கிய தேசிய கட்சி தலைவராக ரணில் நேற்று பதவி ஏற்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஐ தே.க. தலைவராக பதவி ஏற்றார், நேற்றுக் காலை சிறிகோத்தா அலுவலகத்தில் இப்பதவி ஏற்பு வைபவம் நடைபெற்றது.

முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் காமினி திசாநாயக்கா கடந்த 23ஆம் திகதி குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இவர் ஐ தே. கவின் பிரதித் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார்.

1947 இல் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஏழாவது தலைவர் ரணிலாவார். அவர் தலைவராக பதவியேற்ற பின் நடைபெறும் முதலாவது செயற்குழுக் கூட்டம் இன்று நடைபெறும்.

## புதிய அமைச்சரவை நாளை பதவி ஏற்கலாம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான புதிய அமைச்சரவை நாளை திங்கள் பதவி ஏற்கலாம் என்று கூறப்படுகின்றது. அன்றைய தினமே பாராளுமன்றமும் கூடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை பிரதமர் பதவியை ஏற்க தமது தாயார் சிறிமாவோ சம்மதித்து விட்டதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்;

## பலத்தபாதுகாப்பு மத்தியில் பதவியேற்பு வைபவம்

(கொழும்பு)

திருமதி சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதியாக பதவி ஏற்கும் நேற்றைய வைபவத்தையொட்டி கொழும்பு நகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

புதிய ஜனாதிபதி பதவி ஏற்க ஜனாதிபதி செயலகம் சென்றபாதையெங்கும் நூற்றுக்கணக்கில் பொலிசார் நிறுத்தப்பட்டிருந்தனர் காலிமுகத்திடல் கடலில் ஜனாதிபதி செயலகத்திற்கு எதிராக [8ஆம் பக்கம் பார்க்க]

## மலர்ச்செண்டு அளித்து சந்திரிகாவிற்கு வரவேற்பு

(கொழும்பு)

ஜனாதிபதியாக பதவியேற்பதற்காக திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா நேற்றுக் காலை 10 40 மணிக்கு ஜனாதிபதி செயலகத்திற்கு வருகைதந்த போது உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொடவின் புதல்வர் மலர்ச்செண்டு கொடுத்து அவரை வரவேற்றார். அதை அடுத்து அவரை அமரசிறி [8ஆம் பக்கம் பார்க்க]

## சந்திரிகாவின் பிள்ளைகள் கூடவே வந்தனர்

பதவியேற்பதற்காக திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா நேற்றுக்காலை ஜனாதிபதி செயலகத்திற்கு வருகை தந்தபோது அவருடன் அவரது இரு பிள்ளைகளும் உடன் வந்தனர். புதல்வர் விமுக்தியும், புதல்வியான யசோதராவும் ஜனாதிபதியுடன் வருகை தந்தபோதும் வைபவத்தின் போது தமது பெரிய தாயான திருமதி சுனித்ரா நாணயக்காரவின் அருகில் காணப்பட்டனர்.

## பெருமழை பொழிந்ததால் அணிவகுப்பு தாமதம்

[கொழும்பு]

பதவி ஏற்பு வைபவம் முடிவடைந்ததைத் தொடர்ந்து முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதி திருமதி சந்திரிகா சென்றபோது பெருமழை ஆரம்பித்தது. இதனால் அணி வகுப்பு மரியாதையில் சிறிது தாமதம் ஏற்பட்டது. பின்னர் சிறிது மழை தணிந்ததும் அணி வகுப்பு மரியாதை இடம்பெற்ற போதும், வெளிநாட்டு இராஜதந்திரிகளும் மற்றும் முக்கிய பிரமுகர்களும் மழையில் நனைந்தபடியே அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்ளவேண்டி ஏற்பட்டது

## குதிரைப்படை வைத்திருந்த விதியாசமானசிங்க கொடி

(கொழும்பு)

திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா ஜனாதிபதியாக பதவியேற்றதைத் தொடர்ந்து முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். அதன் பின்னர் செந்நிறமேற் சட்டையும், கறுப்பு நிறகாற் சட்டையும் அணிந்த குதிரைப்படையினர் அணி வகுத்துச் செல்ல ஜனாதிபதி சந்திரிகா அலரி மாளிகை நோக்கிப் [8ஆம் பக்கம் பார்க்க]

## ஜே. ஆர்., விஜேதுங்கா கலந்து கொள்ளவில்லை

### தொண்டா தாமதமாக வந்தார்

(கொழும்பு)

சிறிலங்காவின் நான்காவது ஜனாதிபதியாக திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா நேற்றுக்காலை [8ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

**நீமியா உரம் நாயன்மார்கட்டில்**

பயிருக்கு ஊட்டம் அளிப்பது நீமியா உரம். பயிரைப் பூச்சிகள் பீடைகளில் இருந்து பாதுகாப்பது நீமியா உரம்: விவசாயிகள் வசதி கருதி நாயன்மார்கட்டில், செம்மணிவீதி 310ம் இலக்கத்தில் மக்கள் நலன்காக்கும் பிரிவிலும் விற்பனையாகிறது. ''மில்க்வைற்'' (10702)

**ஆண்டு 4**

ஆண்டு 4 வகுப்பிற்கு பலமைப் பரிசில் (1995) மாதிரி வினாத்தாள் 13. 11. 94 ஞாயிறு வெளியிடப்படும். புதிய புலமைப் பரிசில் பயிற்சி 24 தமிழ் கட்டுரைகள் 14 ஆங்கிலக் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது எமது நிறுவனத்திலும், புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி யாழ்ப்பாணம். (10076)

**நல்லின தேசிக்கன்று**

நல்லின தேசிக் கன்றும் தோடங்கன்றும் விற்பனைக்குண்டு விலை ரூபா 10--மட்டும் TASTE LINE INDUSTRIES (PVT) LTD 14Seenier Lane Jaffna. (சி- 10681)

**A/L பௌதிகவியல் 95/96**

தனிப்பட்ட முறையில், சிறு குழுவாக பௌதிகவியல் தூய கணிதம், பிரயோக கணிதம் சிறப்பாக பல வருடம் அனுபவம் பெற்ற ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளோடு கற்பிக்கப்படும். R பாலசுப்பிரமணியம் B Sc Cey Dip - in Ed 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (10098)

**இலவச ஆங்கில வகுப்பு**

(கொழும்புத்துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலிகாமம் மேற்கு சங்கக் கிளையினரால் ஜீ சீ ஈ. (உயர் தரம்) படித்த மாணவர்களுக்கு தற்போது இலவசமாக ஆங்கில வகுப்புகளை நடாத்தி வருகின்றனர். (24)

**வதிவிட வேளாண்மை போட்டிக்கு ஏற்பாடு**

1994/95ம் ஆண்டிற்கான வதிவிட வேளாண்மைப் போட்டியினை யாழ் மாவட்டத்தில் பாரிய அளவில் சிறப்பாக மேற்கொள்ளும் பொருட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், அரச, அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகளுடன் ஆரம்ப ஆலோசனை ஒன்றுகூடல் ஒன்றினை கடந்த 01.11.1994ம் திகதி செவ்வாய்க்கிழமை திருநெல்வேலி விவசாய பயிற்சிக் கல்லூரியில் மேற்கொண்டனர்.

இதில் போட்டியை முறைப்படுத்த தீர்மானங்கள், விதிமுறைகள், வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கல் போட்டி மேற்கொள்ளும் காலங்கள் என்பன தீர்மானிக்கப்பட்டன.

**வருடாந்த பொதுக்கூட்டம்**

அகில இலங்கைத் திருமுறை மன்ற 18 ஆவது ஆண்டு பொதுகூட்டம் இன்று காலை 10 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதினத்தில் சைவப் புலவர் திரு-ப- கணபதிப்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெறும்.

**பனைமர பொருளகம்**

கண்டபடி. பனை தறிப்பதைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும், குறிக்கப்பட்ட பனைமரத்தின் பாகங்களை உரிய முறையில் முழுமையாகப் பயன்படுத்தும் வகையிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் ''பனை மரப் பொருளகம்'' என்னும் நிலையத்தை ஆரம்பித்துள்ளனர். அத்தியாவசிய தேவைகளுக்காக தறிக்கப்பட்ட பனை மரங்களை குறித்த தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்தி விட்டு ஏனைய பாகங்கள் வீணடிக்கப்படுவது அவதானிக்கப்பட்டதன் பேரில் இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

### விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்:- 01-12-1939

விண்ணில்: 13-11-1993

**அமரர் சின்னையா செல்லச்சாமி**

(பலாப்பத்வெல, மாத்தளை)

எமது குடும்பத்தின் ஒளிவிளக்கே
கண்ணை இமைகாப்பது போல் எமைக்காத்த அப்பா
பாசத்துடன் எங்களுடன் வாழ்ந்து
பாதியிலே எம்மை விட்டுப் பிரிந்ததேனோ
அறநெறி தவறாத அன்புருவே
நிதம் நின் நினைவால் வாடுகின்றோம்

மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்
க. பாலசுப்பிரமணியம் (மருமகன்)

தேனாவில் தோட்டம்
இத்தாவில்,
பளை

(10093)

---

### 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீரச்சாவு 13 11-93



**லெப்ரினன்ட் ஜெயரூபன்**

மாணிக்கம் ரஞ்சன்
மட்டுநகர்

விடுதலை நோக்கிய, புலிகளின் பாதையில்
வெற்றிகள் குவித்து விடியலை வருவிக்க
வெங்களம் புகுந்த வேங்கையோடிணைந்தாய்
இம்ரான் பாண்டியன் படையணி கலந்து
பலகளம் கண்டாய் ஜெயரூபா
பூநகர் வெற்றியை தந்தவர் வரிசையில்
இணைந்துமே மறைந்தாய் புல்லரையழித்த
உங்களின் பாதையில எங்களின் .........

(10094) சகோதரன்

---

## நினைவு கூருகின்றோம்...

### 11-11-1994

11 - 11 - 93 அன்று ''ஒப்பரேசன் தவளை'' இராணுவ நடவடிக்கையின் போது பூநகரி வெற்றிக்கு துணை நின்று பலாலி கூட்டுப்படை தளத்தினுள் கரும் புலிகளாகப்புகுந்து வீரச்சாவெய்திய,

கரும்புலி,
**மேஜர் தொண்டைமான்** (கண்ணப்பர் நல்லதம்பி -மட்டு)

கரும்புலி,
**மேஜர் கலையழகன்** (பொன்னையா பேரின்பராசா - மட்டு)

கரும்புலி,
**கப்டன் ஐயனார்** (செல்வநாயகம் இராசசேகரம் - அராலிகிழக்கு - வட்டுக்கோட்டை

கரும்புலி,
**கப்டன் சிவலோகன்** (சின்னத்தம்பி அருளானந்தம் - மட்டு)

கரும்புலி,
**கப்டன் சீராளன்** (ஞானப்பிரகாசம் குணம்- உயிர்த்தராசன்குளம், முருங்கன் - மன்னார்)

கரும்புலி,
**கப்டன் மதிநிலவன்** (கணபதிப்பிள்ளை தவராசா - திருமலை)

கரும்புலி,
**கப்டன் செந்தமிழ்நம்பி** (செல்லத்துரை ஜெகன் - சூசையப்பர்கோவிலடி - கோப்பாய்)

கரும்புலி,
**கப்டன் கரிகாலன்** (இரத்தினசிங்கம் பிரபாகரன் -திருமலை)

கரும்புலி
**லெப். வீரமணி** (தெய்வேந்திரம் சுதாகர் - வட்டுக்கோட்டை கிழக்கு)

கரும்புலி,
**லெப். செங்கண்ணன்** (தனஸ்கோடி செந்தூர்பாண்டியன் - யாழ்ப்பாணம்)

கரும்புலி,
**லெப். கண்ணன்** (நவரெட்ணம் நேசகுலேந்திரன் - உடுத்துறை வடக்கு - தாளையடி)

கரும்புலி,
**லெப். ஜீவரஞ்சன்** (கிருஷ்ணபிள்ளை முருகுப்பிள்ளை - மட்டு)

கரும்புலி,
**லெப். நல்லதம்பி** (தங்கராசா கோகுலநாதன் - மட்டு)

★ 11-11-94 நினைவு கூருகின்றோம் என்ற பகுதியில் மேற்குறிப்பிட்ட மாவீரர்களின் பெயர்கள் இடம்பெறாமையால் அதனை இன்று பிரசுரிக்கின்றோம்.

### 13. 11. 94

1985ம் ஆண்டு இத்தினத்தில் திருமலை - இறால் குழிப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கேதீஸ்** (சண்முகம் ஜெகதீஸ்வரன்- 2ம் குடியிருப்பு, கந்தளாய் - திருமலை)

1988-ம் ஆண்டு திருமலை - தம்பலகமம் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய,

**2-ம்லெப் ஜெயசீலன்** (காளியப்பு நாதகணேசலிங்கம் - தம்பலகமம் - திருமலை)

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் படுகொலைசெய்யப்பட்ட நாட்டுப்பற்றாளரான சுந்தரம் வைகுந்தவாசன் (வளாகவீதி, திருநெல்வேலி - யாழ்)

1991-ம் ஆண்டு வவுனியா - செட்டிகுளம் உக்கிளாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவ முகாம் காவலரண்கள் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய,

**2-ம்லெப் மைக்கல் / தமிழ்வேந்தன்** (பூலோகம்குமார்-வண்ணாங்குளம் - முல்லைத்தீவு)

**குஞ்சன்** (சுப்பிரமணியம் கருணாகரன் - வற்றாப்பளை, முள்ளியவளை - முல்லைத்தீவு)

**மகேந்திரன்** (சந்தானம் ரவிச்சந்திரன் - நெடுங்கேணி - மணலாறு)

**பெனாகரன் / நாவரசன்** (சுப்பிரமணியம் விஜயகுமார் - கல்மடு - வவுனியா)

**அலெக்சாண்டர் / பாவேந்தன்** (கதிரவேலு கணேஸ்கண்ணா - பன்றிகெய்தகுளம் - வவுனியா)

**இசைவாணன் / நீல்டன்** (சுப்பிரமணியம் ஜெயமோகன் - 10ம் வாய்க்கால் - கிளிநொச்சி)

திவகத்தில் இடம்பெற்ற இராணுவநடவடிக்கையில் அகப்பட்டு பின் அங்கிருந்து தப்பி வரும்போது வீரச்சாவெய்திய,

**செங்கதிர்** (கந்தையா துரைரத்தினம் - - -)

1993-ம் ஆண்டு பூநகரி - நாகதேவன்துறை இராணுவக்கடற்படைக் கூட்டுத்தளம்மீது ''ஒப்பரேசன் தவளை'' நடவடிக்கையின்போது வீரச்சாவெய்திய

**மேஜர் செம்பியன் / சிவாஜி** (சின்னத்தம்பி குமாரலிங்கம் - செம்பியன்பற்று அகதிமுகாம்)

**கப்டன் குருகுலசிங்கம் / குரு** (பொன்னுத்துரை சகாயநாதன் - மாமங்கம் - மட்டு)

**கப்டன் இளையராஜன் / இளையராஜா** (ஸ்ரனிஸ்லஸ் மோகன்ராஜ் -தாளையடி - வடமராட்சி கிழக்கு)

**கப்டன் செல்வநாயகம்** (சங்கரப்பிள்ளை நடேசன் - 6ம் குறிச்சி - அம்பாறை)

**கப்டன் தென்றல்** (திருஞானசெல்வம் மேலதாஸ் பெரியமடு, மன்னார் (விடத்தல்தீவு)

**கப்டன் வன்னியசிங்கம் / ஜேம்ஸ்** (சிந்தாத்துரை பர்ணாந்து அன்ரன் தேவராஜா - வட்டக்கண்டல், மன்னார் (பரப்பாங்கண்டல்)

**கப்டன் தியாகன் /மென்டிஸ்** (ஜெயசீலன் சுதா பனங்கட்டிக்கொட்டு - மன்னார்)

**கப்டன் சாமி** (இராசையா வசந்தன் -இலந்தைக்குளம்றோட், அரியாலை - யாழ்)

**கப்டன் மணிவண்ணன்** (எலியாஸ் சுரேஸ்குமார் - நாவாந்துறை வடக்கு - யாழ்)

**கப்டன் புதியவன் /ரகீம்** (பெரியசாமி வடிவேல் - பரந்தன்வீதி, தர்மபுரம் - கிளிநொச்சி)

**லெப்.மணிமாறன் / மார்சல்** (அந்தோனி பர்ணாந்து ஜேசுதாசன் பர்ணாந்து - மன்னார்)

**லெப். துர்க்கா / உஷா** (வடிவேல் கமலேஸ்வரி - பன்குடாவெளி - மட்டு)

**லெப்.ஜெயரூபன்** (மாணிக்கம் ரஞ்சன் - குண்டுமடு - அம்பாறை)

**லெப்.செல்வக்குமார்/சுரேஸ்** (சுப்பிரமணியம் ஜெயக்குமார் - ஒல்டன் எஸ்டேட் - கற்றன்)

**லெப்.றணமன்** சிவஞ்ஞானம் சிவபாலன்- நாவலடி. பன்னாலை - தெல்லிப்பழை)

**லெப்.அழகுநம்பி/றோமியோ** (கந்தசாமி செந்தில்நாதன் - கொக்குவில் கிழக்கு)

**லெப்.நேரியன்** (கந்தையா ஜெகதீசன் - மறவன் புலோமேற்கு, கோணேஸ் வீதி - சாவகச்சேரி)

**லெப்.மாவண்ணன்/குலேந்திரன்** (கோபாலப்பிள்ளை நடேந்திரன் -பள்ளிக்குடியிருப்பு - திருமலை)

**2-ம்லெப்.விமலேந்திரன்** (கயிலாயபிள்ளை சந்திரகுமார் - அம்பிலாந்துறை - மட்டு)

**2-ம்லெப்.பரிசுதன்** (ஆறுமுகம் சந்திரசேகர் -வேலப்பர்லேன் - அரியாலை (மட்டக்களப்பு)

**2-ம்லெப்.சர்வதன்/ தயாளன்** (தம்பிப்பிள்ளை நிமலநாதன் - துறைநீலாவணை - மட்டு)

**2-ம்லெப்.பாக்கியராஜா** (கோபாலப்பிள்ளை நித்தியராசா - கொக்கட்டிச்சோலை - மட்டு)

**2-ம்லெப். ஜெயசிந்தன்/ஜெசி** (வீரச்சாமி கணேஸ் நெடுங்கேணி - முல்லைத்தீவு)

**2-ம்லெப் .ஆதிரையான்/கில்மன்** (தங்கராஜ் ரகுபிரபாச்சந்திரன் - சுண்டிக்குழி (ஊர்காவற்துறை)

**2-ம்லெப். முத்துவேல்/மார்க்கோஸ்** (கொஸ்தான் அந்தோனி - நாகதாழ்வு - திருக்கேதீஸ்வரம்)

**2-ம்லெப். விஜயகுமார்** (சிற்றம்பலம் பார்த்தீபன் - பெரியமடு - மன்னார்)

**2-ம்லெப். தமிழ்** (சுந்தரலிங்கம் ரஞ்சினிதேவி - தம்பசிட்டி, புலோலி மேற்கு - பருத்தித்துறை)

**2-ம்லெப் ஆற்றலோன்** (யோகநாதன் மகேஸ்வரன் - சுழிபுரம் மேற்கு (காரைநகர்)

**2-ம்லெப். பண்டிதர்** (தனபாலசிங்கம் வீரவதனன் - செந்தில்நகர் - பளை)

**2-ம் லெப். கோணேஸ்வரன்/கோணேஸ்** (சித்திரவேல் ஜீவரத்தினம் - கதிரவெளி - மட்டு)

**விமலதாஸ்/விமலராஜ்** (சிவப்பிரகாசம் மிரசுதாஸ் - முனைக்காடு - மட்டு)

**அருளன்** (அன்ரனிமைக்கல் கருணாகரன் - ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**நாகனன்**(சிதம்பரப்பிள்ளை சிவகாந்தன் - 3ம் வட்டாரம், முள்ளியவளை - முல்லைத்தீவு)

**ஆற்றலோன்** (முருகன் உதயசங்கர் - ரம்பைக்குளம் - முல்லைத்தீவு)

**துரையரசன்** (அமரசிங்கம் கெங்கேஸ்வரன் - ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**மார்க்கண்டேயர்** (செல்லத்துரை உதயகுமார் - ஆனைக்கோட்டை (செட்டிகுளம்)

**தினகரன்** (சித்திரவேல் கங்காதரன் - தம்பலகமம் - திருகோணமலை)

07-11-1993இல் யாழ் மாவட்டத்தில் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விழுப்புண்ணடைந்து சிகிச்சையின் போது வீரச்சாவெய்திய,

**மேஜர் பூவழகு/விக்கி** (சண்முகநாதன் விக்கினேஸ்வரன் - 6ம் வட்டாரம் - நயினாதீவு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும் இந்தியப் படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்
**தமிழீழ விடுதலைப் புலிகள்**
(இ-10700)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

**மேஜர் கமிலோ**
**நவறட்ணம் கருணவேல்**

பிறப்பு: 23-5 1971
வீரச்சாவு: 13.11-1993



எம்பாசத்தின் கண்மணியே கண்ணா
ஈழம் என்ற கொள்கை கொண்டு
ஏந்தினையோ துப்பாக்கி
புலியாக நீயும் சாதனைகள் பல புரிந்து
தலைவனின் பாதைதனில் தனயன் நீ
சென்றாயே

பூநகரித் தடைமுகாம் தகர்ப்பினிலே
தன்னுடலில் விழுப்புண்ணை ஏந்தியிங்கு
புவிதனிலே சரித்திரமாய் ஆகிவிட்டாய்
ஈன்றெடுத்த தாயுமிங்கு ஏங்குகிறாளே
உன் பூவிழியால் எம்மையினிப் பார்க்காயோ

உன் ஆத்மா சாந்தியடைய தினமும் நாம் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சிக்கின்றோம்.

நிரந்தர முகவரி:-
சில்லாலை வீதி,
பண்டத்தரிப்பு

தாய், சகோதரர்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

தற்போதைய முகவரி:-
112, நந்தாவில் அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(10085)

# யாழ். மிட்ரவுண் றோட்ட றக்ட் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி;

## கடந்த வாரம் நடந்த இரு பரபரப்பான போட்டிகள்

யாழ் மிட் ரவுண் றோட் டறக்ட் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ் மாவட் டத்தின் முன்னணிக் கழகங்க ளான பாடும்மீன், சென் அன்ர னீஸ் சென் மேரீஸ், சென்ெக ன்றீஸ், சென் நிக்கிலஸ், ஞான முருகன், றோயல், ஸ்கந்தா ஆகிய எட்டு கழகங்கள் அழை க்கப்பட்டுபோட்டிகள் யாவும் விக்முறையில் நடை பெற்று வருகின்றன.

எட்டு கழகங்களும் ஒன்று டன் ஒன்று விளையாடி கூடிய புள்ளிகளை பெறும் முதல் நான்கு கழகங்களும் அரையி றுதி போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டு அதில் வெற்றி பெறும் கழகங்கள் இறுதிப் போட்டிகளில் விளையாட இருக்கின்றன. இப் போட்டி கள் இவ்வருட முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு சிலபோட் டிகள் நடாத்தப்பட்டபின்னர் தவிர்க்க முடியாத காரணத் தால் இடைநிறுத்தப்பட்டி ருந்தன கடந்த 2-ம் திகதி மீண்டும் போட்டிகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன 2ம் திகதி நடைபெற்ற இரு ஆட்டங்க ளில் முதல் நடைபெற்ற ஆட் டத்தில் சென் கென்றிஸ் அணி சென் அன்ரனீஸ் அணியினரி டம் 1-3 என்ற கோல் கணக் கில் தோல்வி கண்டனர் இர ண்டாவது ஆட்டத்தில் சென் மேரிஸ் அணியும் றோயல் அணியும் மோதினர் இப் போட்டியில் 1-0 என்றகோல் கணக்கில் றோயல் அணியி னர் வெற்றி பெற்றனர் இப் போட்டியில் றோயல் அணி யின் சார்பில் வெள்ளை தமது அணிக்காக ஒரு கோலை பெற்றுக் கொடுத்தார்

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இரு போட்டிக ளில் முதலாவது ஆட்டத்தில் ஞானமுருகன்விக்கைஎதிர்த்து றோயல் விக மோதியது இப் போட்டியில் இடைவேளை வரை ஞான முருகன் அணியி னர் பக்கமே விளையாட்டு சார்ந்திருந்தது ஞான முருகன் அணியின்



இடது பக்க முன்வரிசை வீரர் றதீஸ்வரன் மிகவும் திறமை யான முறையில் பந்தினை பல முறை கொண்டு சென்று கோல் பரப்பினுள் கொடுத்த போதும் கோல் போடும் சந் தர்ப்பங்கள் தவறவிடப்பட் டன. இடைவேளைக்குஐந்து நிமிடம் இருக்கையில் ஞான முருகன் அணியின் வீரர் சிந்து தமது அணிக்காக ஒரு கோலை போட்டார்.

இடைவேளை முடிந்து ஆட்டம் ஆரம்பித்தபோது றோயல் அணிவீரர்களின் விளையாட்டில் முன்னேற்றம் காணப்பட்டது. றோயல் அணியின் 12ம் இலக்க வீரர் காங்கேயன் மைதானத் தின் சகல பகுதிகளிலும் நின்று திறமையாக விளையாடினார் றோயல் அணி வீரர் வெள் ளை சுமார் 15 யார் தூரத் தில் இருந்து அடித்த பந்து ஒன்றை கோல் காப்பு வீரர் பிடிக்க முனைந்த போதும் அது கை நழுவி றோயல் அணியினருக்கு ஒரு கோலா னது இதன் பின் றோயல் அணியினர் கோல்களைப் போட முயற்சித்த போதும் ஞான முருகன்பிற்காப்புவீரர் பாபு திறமையாக விளையாடி தடுத்துக் கொண்டிருந்தார் இரு அணிகளும் மேலதிக கோல் எதுவும் போடாமையி னால் 1-1 என்ற நிலையில் வெற்றி தோல்வி இன்றி முடி வடைந்தது.

இரண்டவதாக நடைபெ ற்ற ஆட்டத்தில் சென் அன்ர னீஸ் வி.க. எதிர்த்து பாடும் மீன் வி.க. மோதியது இது மிகவும் பரபரப்பான ஒருஆட் டமாகும் பாடும் மீன் விளை யாட்டுக் கழகம் அணியினர் விளையாட்டு மிகவும் சாதுரிய மாகவும் வேகமாகவும் அமை ந்திருந்தது இடைவேளை வரை பாடும் மீன் அணியினர் பக்கம் விளையாட்டுசார்ந்திரு ந்த போதும் அன்ரனிஸ் அணி யினரின் பிற் காப்பு வீரர்கள் எதிரணியினருக்கு ஈடு கொடு த்து கோல் போடும் முயற்சி யை தடுத்த வண்ணம் இருந்த னர். இடைவேளைக்கு முன் பாடும் மீன் அணியினருக்கு கிடைத்த பனால்டி உதை ஒன்றை பாடும் மீன் அணி வீரர் கொலின் வெளியே அடி த்து துரதிர்ஷ்டவசமாக கோல் போடும் ஒரு சந்தர்ப் பத்தினை தவறவிட்டார். இடைவேளையின் பின் அன்ர னிஸ் அணியினரின் விளையா ட்டில் முன்னேற்றம் காணப் பட்டது. சென் அன்ரனிஸ் அணிவீரர் ஆனந் தமது அணி க்காக ஒரு கோலைப் போட் டார் இதன் பின் ஆட்டம் மிக வும் விறுவிறுப்பாக அமைந்தி ருந்தது பாடும்மீன் அணியின் தலைவர் டார்வின் கோல் போடுவதற்கு முயற்சி செய்து மிகவும் அற்புதமாக விளை யாடிக் கொண்டிருந்தார்.

சென் அன்ரனிஸ் அணியில் வலது பக்க முன்வரிசை வீரர் அன்றா மிகவும் வேகமாக அடித்த பந்து ஒன்றை பாடும் மீன் அணியின் கோல்காப்பு வீரர் மிகவும் சாதுரியமாக பிடித்தார் பாடும் மீன் அணி யினர் மிகவும் திறமையாக விளையாடிய போதும் கோல் எதுவும் போடாதது துரதிர்ஷ் டவசமானதாகும்ஆட்டம்1:0 என்ற நிலையில் 9நிமிடங்கள் முந்தி முடிக்கப்பட்டது மை தானத்தில் போதிய வெளிச் சம் இன்மையே காரணம் என நடுவரினால் போட்டி ஒழுங்கு அமைப்பாளருக்கு அறிவிக்கப் பட்டிருந்தது

மேலும் போட்டிகள் 3மணி க்கு ஆரம்பமாகும் என போ ட்டி ஒழுங்கமைப்பாளர்களி னால் அறிவிக்கப்பட்ட போ திலும் மாலை 3 40மணிக்கே முதலாவது ஆட்டம் ஆரம்பிக் கப்பட்டது இதற்கு காரணம் குறிப்பிட்ட கழகங்கள் நேரத் திற்கு உரிய ஆயத்தங்களுடன் மைதானத்திற்கு சமுகமளிக் காமையே ஆகும்.

மற்றும் போட்டி நடுவர்கள் மைதானத்தில் அணிகள் நுழைவதற்கான (சமிக்ஞை) விசில் ஊதிய பின்னர் சுமார் பத்து நிமிடங்கள் வரை காத் திருந்ததும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும். இனிவரும் கால ங்களில் போட்டிகளில் இவ்வா றான தவறுகள் ஏற்படாத வண்ணம் போட்டி ஆரம்பிக்க முன்னரே வீரர்கள் தயார் நிலையில் இருப்பது கவனத் திற் கொள்ள வேண்டியதொ ன்று இது ஒவ்வொரு கழகத்தி னரும்போட்டிஒழுங்கமைப்பா ளரும் கவனத்தில் எடுத்து கடை ப்பிடிக்க வேண்டியது முக்கிய மானதொன்றாகும் இது பல பிரச்சினைகளைத் தவிர்க்க உதவும்

யாழ்ப்பாணத்தின் பிரபல் யமான அணிகளுள் நான்கு அணிகள் அன்றைய தினம் நடைபெற்ற இரண்டு ஆட் டங்களில் கலந்து கொண்டன ரசிகர்கள் மிகப் பெரும்,எண் ணிக்கையில் என்றுமில்லாத வாறு கூடியிருந்தது இக்கழக ங்களுக்கு ரசிகர்கள் மத்தியில் காணப்படும் பெரும் செல்வா க்கை எடுத்துக்காட்டுவதாக இருந்தது:

எஸ். தயாபரன்

'நினைவில் நின்று நிமிர்வோம்'' விளையாட்டு விழா

# ரசிகர்களை உற்சாகமூட்டிய மாட்டுவண்டிச்சவாரிபோட்டி

மன்னார் மாவட்டத் தளபதி மாவீரன் லெப். கேணல் விக்டர் ஒஸ்கார் இர ண்டாம்லெப்-ரோம் ஆகியோ ரின் எட்டாம் ஆண்டு நினை வாக ''நினைவில் நின்று நிமிர்வோம்' விளையாட்டு விழா நடைபெற்றது இது மன்னார் மாவட்டம் கண்ட பெருவிழா என்றால் அதில் மிகை ஏதும் இல்லை இப்போ ட்டிகள் ஐப்பசி 8-12 வரை 4 நாட்கள் நடைபெற்றன. கால்பந்துப்போட்டி கரபந் தாட்டம் வலைப்பந்தாட்டம் துவிச்சக்கர வண்டியோட்டப் போட்டிகள் வீதிஓட்டம் மாட்டுவண்டிச்சவாரி என்று வகைவகையாக விளையாட்டு வீரர்களின் ரசனைக்கேற்ப நிகழ்வுகள் தெரிவுசெய்யப்பட் டிருந்தமை மிகவும் பாராட் டத்தக்கதாகும் இப்போட்டி களில் வன்னி மன்னார் மாவ ட்டங்கள் முழுமையாக பங்கு கொண்டன

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி கலகலப்பு நிறைந்த தொரு நிகழ்வாகும் எமது பாரம்பரியவிளையாட்டும்கூட இப்போட்டி குறுகிய கால த்தில் தீர்மானித்து வைக்கப் பட்டதாலும், மழை காரண மாகவும் வெளிமாவட்டப் போட்டியாளர்கள் கலந்து கொள்ளவில்லை எனினும் மன்னார் மாவட்ட முன்னணி மாட்டுவண்டிச்சவாரிப் போட் டியாளர்கள் கலந்து கொண் டனர். பெருந்திரளான மக் கள் பார்த்து ரசித்த இப்போ ட்டியானது மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியை மக்கள் எவ்வளவு விரும்பி ரசிக்கின் றார்கள் என்பதைத் தெளிவா கப் புரிந்து கொள்ளக் கூடிய தாகவிருந்தது

போட்டி முடிவில் வெற்றி பெற்றோர்:-

ஏ பிரிவு:-

1-ம் இடம்- சி. அமிர்தலிங் கம், இத்திக்கண்டல் அடம்பன்

2-ம் இடம்- சி. ரெட்ணம்; பாகாரிகண்டல் முருங்கன்

3-ம் இடம்- ச. சந்திரன், நொச்சிக்குளம், உயிலங்குளம்

பி பிரிவு

1-ம் இடம்- ச. சந்திரன், நொச்சிக்குளம். உயிலங்குளம்

2-ம் இடம்- ம. செபஸ்ரி லான், பரப்பாங்கண்டல், உயி லங்குளம்

3-ம் இடம்- எஸ். கொன்சி கருங்கண்டல், அடம்பன்

சி பிரிவு

1-ம் இடம்- அருளானந்தம் முருங்கன் கமம், முருங்கன்
2-ம் இடம்- ம.செபாஸ்ரியாம் பிள்ளை, பரப்பாங்கண்டல், உயிலங்குளம்

3-ம் இடம் விநாயகராஜன் குரியகட்டைக்காடு, நானா ட்டான்

வண்டிச் சவாரிப் போட்டி களில் வெற்றி பெற்றோருக்கு தங்கப் பதக்கங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

## சிறிலங்கா - சிம்பாப்வே கிரிக்கெட் டெஸ்ட் தொடர்


# பரபரப்பான முடிவுகள் எதுவுமின்றி சமநிலையில் முடிந்த போட்டிகள்

சிறிலங்கா கிரிக்கெட் அணி யினர் பாகிஸ்தானுடன் டெஸ்ட், மற்றும் ஒரு நாள் போட்டிகளில் தோல்விகண்டு கடும் விமர்சனத்துக்குள்ளா கினர் ஆனால் தொடர்ந்து வந்த சிங்கர் கிண்ணப் போட் டிகளில் சிறப்பாகச் செய்த னர். இந்தத் தன்னம்பிக்கை யுடன் மூன்று டெஸ்ட் ஆட் டம் மற்றும் ஒருநாள்போட்டி க்காக சிம்பாப்வேசென்றனர். சிம்பாப்வேயில் ஆரம்பிராந் திய ஆட்டங்களில் சிறிலங்கா அணி மிகச் சிறப்பாகச் செய் தது சில ஆட்டங்களில் 400, 600 என்று ஒட்டங்களைக் குவித்தது.

டெஸ்ட் போட்டிகள் ஆர ம்பமானதும் நிலைமைகள் வித்தியாசமாகத் தென்படத் தொடங்கின. இவர்கள் நினை த்தது போல சிம்பாப்வே அணியினைக் கட்டுப்படுத்த இயலவில்லை முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளிலே 157 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது இதி லும் இறுதி 30 ஓவர்களில் 59 ஓட்டங்களையே பெற முடிந்தது ஒரு கட்டத்தில் ஆட்டத்தை வளர்த்தெடுத்து 3181 3 என்ற நிலையில் இருந்த சிறிலங்கா மிகுதி 7 இலக்குகளை 65 ஓட்டங்கள் மட்டும் எடுத்துப் பறிகொடு த்தது இறுதியில் சகல இலக் குகளையும் இழந்து 383 ஓட் டங்களை சிறிலங்கா பெற் றது. அசங்க குருசிங்க 533 நிமிடம் நின்று 128 ம் சஞ்சீவ றணதுங்க 118 ஓட்டங்களும் பெற்றுக்கொண்டனர் ஸ்ரீக் 4/79 விட்டோல்4/70 என் றவாறு இலக்குகளைப்பெற் றனர் சிம்பாப்வே தன் முத லாவது இனிங்சில் 318/8 என்ற நிலையில் 4ம் நாள் ஆட்டம்முடிவடைந்தது. முன் வரிசை வீரர்கள், ஜீ. பிளவர் டெக்கர், கம்பல் கோட்டன் முதலியோர் சராசரியாக நாற்பதுக்கும் மேல் ஓட்டங் களைப் பெற்றனர். பந்துவீச் சில் சமிந்தவாஸ்4/74, முரளி தரன் 2/60 என இலக்குக ளைப் பெற்றனர் விக்கெட் காப்பாளர் புபுது ஐந்து காட்சுகள் பெற்றது குறிப்பி டத்தக்கது 5ம் நாள் ஆட்டம் மழை காரணமாக முற்றாகக் கைவிடப்பட்டவ ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடி வடைந்தது.

2-ம் டெஸ்ட் புலவாயோ நகரில் ஆரம்பமாயிற்று இது சிறிலங்கா அணிக்குப் பெருந் சோதனையாக அமைந்தஆட் டமாக அமைந்தது இங்கும் மழை தொடர்ந்ததால் குறிப் பிட்ட தினத்துக்கு இரு நாள் பிந்தியே ஆட்டம் ஆர ம்பமாயிற்று முதலாவது டெஸ்ட் ஆட்டம் போலவே இங்கும் எண்ணிக்கைகள் கூடுதலாகவே அமைந்தன முதலில் துடுப்பெடுத்தடிய சிம்பாப்வே முதல்நாள்4/213 என அமைந்தது. இறுதியில் 9/426 என்ற நிலையில் சிம் பாப்வே ஆட்டத்தை நிறுத் திக் கொண்டது. இதில் முக் கிய சாதனை உதவித்தலைவா டேவிட் கோட்டன் பெற்ற 266 ஓட்டங்களாகும். 37 வயதுடைய இவர் பெற்ற இவ்வெண்ணிக்கை சிம்பாப் வேக்கும் கோட்டனுக்கும் அதிகூடிய எண்ணிக்கையா கும்.

தொடர்ந்து துடுப்பெடுத் தாடிய சிறிலங்கா அணியினர் 96/6 என்றநிலைக்கு மளமள வெனச் சரிந்தனர். ஆனால் பின்வரிசை ஆட்டக்காரர்கள் சிறிது நிலைத்து நின்றமை யால் 218 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. இதனால் தொடர்ந்து துடுப் பெடுத்தாட நிர்ப்பந்திக் கப்பட்ட சிறிலங்கா 4ம் நாள் முடிவில் 3/142 என்ற நிலை யில் இருந்து மறுநாள் 4/192 என்ற நிலையுடன் ஆட்டம் முடிவடைந்தது. இங்கு சிறப்பாகக் குறிப்பி டத்தக்கது சஞ்சீவ ரணதுங்க



பெற்ற சதமும் அரவிந்த டிசில்வா 222 நிமிட நேரம் நின்று 27 ஓட்டங்கள் பெற்று ஆட்டத்தைப் பாதுகாத்தது ஆகும். உண்மையில் இவ்விரு வரும் சிம்பாப்வேயின் முத லாவது டெஸ்ட் வெற்றியை த்தட்டிப் பறித்து விட்டார் கள் எனலாம்.

மூன்றாவது டெஸ்ட் போட்டியும் முதலிரண்டு போட்டிகள் போலவே உப்புச் சப்பற்ற போட்டியாகவே அமைந்தது முதலில் துடுப் பெடுத்தாடிய சிறிலங்கா அணி 402 ஓட்டங்களைப் பெற் றுக்கொண்டது என்னவோ உண்மைதான். ஆனால் ஆட் டத்தின் மூன்று நாட்களும் கூடவே ஓடிமறைந்து விட் டன, சிறிலங்கா அணியில் குறிப்பிடத்தக்கதாக அமை ந்தது ஒன்றே ஒன்று தான் முன்னைய ஒருசில டெஸ்ட் ஆட்டங்களில் 90 களில் ஆட் டம் இழந்த அசான் திலக ரத்ன 116 ஓட்டங்கள் பெற் றமையே அதுவாகும் சிம்பா ப்வே சார்பில் ஸ்ரீக் 4 இலக் குகளைத் தனதாக்கிக் கொண்டார்.

தொடர்ந்து துடுப்பெடுத் தாடிய சிம்பாப்வே தம் முத லாவது இனிங்சில் 375 ஓட் டங்களைப் பெற்றுக் கொண் டனர் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இரட்டைச்சதம் பெற்ற டேவிட் கோட்டன் இவ்வாட்டத்திலும் 142 ஓட் டங்களைப் பெற்றுக்கொண் டார்.

சிம்பாப்வேயின் முதலாவது இனிங்ஸ் விக்கெட்டுகளில் 116 ஓட்டங்கள் கொடுத்து 7 இல க்குகளைக்கைப்பற்றிக்கொண் டார். இதுவே இவரின் அதி திறமை வாய்ந்த பந்து வீச் சுச் சராசரியாகவும் அமை கின்றது.

இறுதிநாளாகியபோது மீள வும் துடுப்பெடுத்தாட ஆரம் பித்த சிறிலங்கா அணியினர் மதிய இடைவேளையின் போது 3/89 என்ற நிலையில் காணப்பட்டனர் ஆனால் கடும் மழையின் காரணமாக அதன்பின் ஆட்டம் தொடரா மல் இடைநிறுத்தப்பட்டது. எனவே இதுவும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந் தது.

மொத்தத்தில்எதுவித சுவை யும் அற்றதொரு ஆட்டத் தொடராக இத்தொடர் முடி வடைந்தது இதற்கு இன் னொரு காரணம் தொடர் மழையாகும் இரண்டு அணி களிலும் தனிப்பட்ட வீரர் களின் சாதனைகளை குறிப் பிடக்கூடியதாக இருந்ததே ஒழிய ரசிகர்களைப் பொறுத் தவரை எதுவித சுவையும் அற்ற தொடராக இது அமை ந்துவிட்டது.

நிர்மலன்

# விளையாட்டு அரங்கு

யாழ். கல்விவலயம் II

# 17 வயதிற்குகீழ் கலட்டி றோ. க; 19 வயதிற்குகீழ் ஹாட்லி சம்பியனாகின

வடமராட்சிக் கல்விக் கோட்டமாக இருந்து கரவெ ட்டி, பருத்தித்துறை. மருதங் கேணி என மூன்று கல்விக் கோட்டங்களாக 1-1-94 தொடக்கம் கல்வித் திணைக் களம் வலயம் 02 இன் கீழ் பணியாற்றத் தொடங்கியது.

அன்று முதல் உடற்கல்வி சேவைக்கால ஆசிரியர் ஆலோசகரின் வழிகாட்டலின் உதவியுடன் மூன்று கல்விக் கோட்ட சகல பாடசாலைக ளும் சகல போட்டிகளில் பங்குகொள்வது சிறப்பம்ச மாகும்,

தரம் 1 ஏ-பி, 1 சி பாடசா லைகளுடன் தரம் 2 ஐக் கொண்ட பாடசாலைகள் போட்டிப் போட்டு வளர்வது சிறப்பாகக் குறிப்பிடத்தக்க தாக அமைகின்றது. பருத்தி த்துறைக் கல்விக் கோட்டத் தின் உதைபந்தாட்ட வளர் ச்சியையும்காட்டி நிற்கின்றது.

தரம் 1 ஏ பி. 1 சி பிரிவு பாடசாலைகளில் இருந்து ஐந்து பாடசாலைகளும் தரம் 2 பாடசாலைகளில் இருந்து நான்கு பாடசாலைகளும் பங்கு கொண்ட மூன்று வய துப் பிரிவிலும் மொத்தம் 21 அணியினர் 17-10-94 முதல் லீக் முறை சுற்றுப் போட்டி அமைப்பில் உதைபந்தாட்டப் போட்டிகள் ஹாட்லிக் கல் லூரி ஆடுகளத்தில் நடைபெ ற்றன.

வல்வை சிதம்பராக் கல் லூரி, ஹாட்லிக் கல்லூரி வேலாயுதம்ம.வி,தொண்டம வாறு வீரகத்திப் பிள்ளை ம-வி, கலட்டி றோ-க பாட சாலை, அல்வாய் ஸ்ரீலங்கா பாடசாலை, புற்றளை ம.வி. தும்பளை சிவப்பிரகாச வித், வல்வை சிவகுரு வித்தியால யம் ஆகியன பங்குகொண்டு போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெற்றன, இதிலிருந்து புள்ளி அடிப்படையில் வேலா யுதம் ம. வி, சிதம்பராக் கல் லூரி, வல்வை சிவகுரு வித்தி யாலயம் ஆகிய பாடசா லைகள் தெரிவாகி யாழ் மாவட்ட பாடசாலைக ளின் அபிவிருத்திக் குழு நட த்தும் போட்டிகளில் பங்கு கொள்கின்றன.

17 வயதிற்கு உட்பட்ட பிரிவில் கலட்டி றோ. க; பாடசாலை, அல்வாய் ஸ்ரீல ங்கா பாடசாலை, புற்றளை ம. வி. சிதம்பராக் கல்லூரி வல்வை சிவகுரு தொண்ட மணலாறு வீரகத்திப்பிள்ளை ம. வி, தும்பளை சிவப்பிர காசம் வித்தியாலயம், ஹாட் லிக்கல்லூரி, வேலாயுதம் ம. வி. உட்பட 9 பாடசாலை கள் டங்கு பற்றி அரை இறு திப் போட்டிக்கு நான்கு பாட சாலைகள் தெரிவாகின

அப்போட்டியில் ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து கலட்டி றோ. க. பாடசாலை விளை யாடி, கலட்டி றோ. க. பா டசாலை 1 கோல் போட்டது ஹாட்லிக் கல்லூரி கோல் எதுவும் போடவில்லை.

வல்வை சிவகுரு ம- வித் தியாலயத்தை எதிர்த்து தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை ம- வி- விளையாடி வல்வை சிவகுரு வித்தியால யம் 4 கோல்கள் போட் டது வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் கோல்கள் எது வும் போட முடியவில்லை-

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் ஹாட்லிக்கல்லூரி யை எதிர்த்து வீரகத்திப்பிள் ளைம- வித்தியாலயம் மோதி ஹாட்லிக்கல்லூரி 04 கோல் களை போட்டு மூன்றாம் இடத்தை ஹாட்லிக்கல்லூரி தட்டிக்கொண்டது-

முதலாம் இரண்டாம்இடத் திற்கான போட்டியில் வல்வை சிவகுரு வித்தியாலயத்தைஎதி ர்த்துகலட்டி றோ-க-பாடசா லை மோதியது அதில் கலட்டி றோ.க. பாடசாலை 01 கோல் போட்டு சா ம்பியனானது. வல்வை சிவ குரு வித்தியாலயம் கோல் எதுவும் போடாதுஇரண்டா ம்இடத்தைப் பெற்றது.

19 வயதிற்கான போட்டி யில் ஹாட்லிக்கல்லூரி வல் வை சிதம்பராக்கல்லூரி அல் வாய் ஸ்ரீலங்கா வித்திய ல யம், ஆகிய பாடசாலைகள் பங்கு கொண்டன-

சிதம்பராக் கல்லூரியுடன் எதிர்த்து விளையாடிய ஸ்ரீ லங்கா பாடசாலை அதன் பின் போட்டியில் இருந்து விலகிக் கொண்டது இறுதிப் போட்டிக்கு ஹாட்லிக் கல் லூரியைஎதிர்த்து சிதம்பராக் கல்லூரி விளையாடியது ஹாட்லிக் கல்லூரி சாம்பிய னாக தெரிவானது.

(4 ஆம் பக்கம்பார்க்க)

# யாழ். விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்திய மாபெரும் விளையாட்டு விழா

யாழ்மாவட்டவிளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் ஒழுங்கமைத்து நடாத்தப்பட்ட 1994-ம் ஆண்டிற்கான மாபெரும் விளையாட்டுவிழா இறுதி நிகழ்வுகளும் பரிசளிப்பு விழாவும் கடந்த மாத இறுதியில் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட விளையாட்டரங்கில் பார்த்தோர் ஒரு குட்டி ஒலிம்பிக் விழா என்று மெச்சத்தக்க விதத்தில் வெகுசிறப்பாகவும் கட்டுக்கோப்பாகவும் யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவின் தலைவர் சி. இளம்பரிதி (யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்) தலைமையில் நடந்தேறியது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு கே கரிகாலன் அவர்களும் கௌரவ விருந்தினர்களாக தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் வண பிதா பிரான்சிஸ் யோசப் அடிகளார், மகளிர் அமைப்பு வலிகாமம் பொறுப்பாளர் செல்வி பைரவி ஆகியோரும் சிறப்புவிருந்தினர்களாக யாழ் வணிகர் சங்கத் தலைவர் திரு வே சிற்சபேசன் சிற்பக்கலைஞர் வெ. கெங்காதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

1991 ம் ஆண்டு தொடக்கம் நடாத்தப்பட்டு வரும் இவ் விளையாட்டு விழாவில், இம் முறை, வடமராட்சி வலயம், தென்மராட்சி வலயம், வலிகாமம் கிழக்கு வலயம், வலிகாமம் மேற்கு வலயம், தீவக வலயம் ஆகியவற்றில் இருந்து இருநூற்றிற்கும் மேற்பட்ட வீரர் வீராங்கனைகள் கலந்து கொண்டனர்:

வியாழக் கிழமை, வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கும், சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை, ஆகிய இருதினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இடம் பெற்ற 36 மெய்வல்லுனர் போட்டிகளில் பல புதிய சாதனைகள் உருவாக்கப்பட்டுள்ளன: மேலும் இம் முறை மல்யுத்தம் குத்துச் சண்டை, கராத்தே, கபாடி ஆகிய போட்டிகளும் முதன் முறையாக இவ் விழாவில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவ் விளையாட்டு விழா நிகழ்ச்சிகளில் சில முக்கிய போட்டிகளின் பெறுபேறுகள் இங்கே தரப்படுகின்றன.

ஆண்களுக்கான 26 மைல் மரதன் ஓட்டப் போட்டி

1-ம் இடம் தீவக வலய திரு க சண்முகம்பிள்ளை

2-ம் இடம் உடுவில் வட்டம் திரு கி உதயகுமார்

3-ம் இடம் அதேவட்டம் திரு க சிறிகாந்தன்

பெண்களுக்கான 10 மைல் மரதன் ஓட்டப் போட்டி

1-ம் இடம் சண்டிலிப்பாய் வட்டம் செல்வி யோ ஜீவராணி

2-ம் இடம் உடுவில் வட்டம் செல்வி செ கௌசிகா

3-ம் இடம் கெல்லிப்பளை வட்டம் செல்வி ந சாந்தினி

ஆண்களுக்கான 50 மைல் துவிச்சக்கரவண்டி ஓட்டம்

1-ம் இடம் சண்டிலிப்பாய் வட்டம் ம நிர்மலேஸ்வரன்

2-ம் இடம் உடுவில் வட்டம் திரு இ அமலேஸ்வரன்

3-ம் இடம் சண்டிலிப்பாய் வட்டம் திரு தெ சிவகுமார்

பெண்களுக்கான 20 மைல் துவிச்சக்கரவண்டி ஓட்டம்

1-ம் இடம் சண்டிலிப்பாய் வட்டம் செல்வி க குமுதினி

2-ம் இடம் சண்டிலிப்பாய் வட்டம் செல்வி ச சசிகலா

3-ம் இடம் தெல்லிப்பளை வட்டம் செல்வி ஐஸ்வினியா

ஆண்களுக்கான 3ஆயிரம் மீற்றர் வேகநடை-

1-ம் இடம் சண்டிலிப்பாய் வட்டம் திரு பொ ஜெயரூபன்

2-ம் இடம் சண்டிலிப்பாய் வட்டம் திரு இ தியாகராசா

3-ம் இடம் பருத்தித்துறை வட்டம் திரு ச நாகேந்திரம்

## குத்துச் சண்டை

32-36 கிலோ கிராம் பிரிவுப் போட்டியில் 1-ம் இடத்தை ஆ. அருந்தவச் செல்வமும் 2-ம் இடத்தை சி. அருளாநந்தமும 3-ம் இடத்தை சு. சுபாஸ்கரனும் பெற்றனர்

33-42 கிலோ கிறாம் பிரிவில் 1-ம் இடத்தை த. யோகேஸ்வரனும் 2-ம் இடத்தை வே. ஆனந்தீஸ்வரனும் 3-ம் இடத்தை கி. ரவியும் பெற்றனர்,

45-48 கிலோகிராம் பிரிவில் 1-ம் இடத்தை ந, காண்டீபனும் 2-ம் இடத்தை த. ரமேசும் 3-ம் இடத்தை யே சுரேசும் பெற்றனர் 51-56 கிலோ கிராம் பிரிவில் 1-ம் இடத்தை த. சுரேசும் 2-ம் இடத்தை க சந்திரகுமாரும் 3-ம் இடத்தை ச- சந்திரகுமாரும் பெற்றனர்-

## மல்யுத்தம

மல்யுத்தப்போட்டியில்

32-36 கிலோகிராம் பிரிவில் 1-ம் இடத்தை து-சிறீஸ்காந்தரூபனும் 2-ம் இடத்தை து.செல்வகுமாரும்பெற்றனர்

40-44 கிலோகிராம் பிரிவில் 1-ம் இடத்தை சி- றஞ்சனும் 2-ம் இடத்தை உ. சசீகரனும் பெற்றனர்-

45 - 48 கிலோ கிராம் பிரிவில் 1ம் இடத்தை நா. சித்திரமும் 2ம் இடத்தை யோ. வசந்தராசாவும் 3ம் இடத்தை ம- ரவியும் பெற்றனர்.

49 - 51 கிலோகிராம் பிரிவில் 1ம் இடத்தை சு. மோகனதாசும், 2ம் இடத்தை அ ஜெயகாந்தனும் 3ம் இடத்தை சு- ஜெயபதியும் பெற்றனர்-

52 - 55 கிலோக் கிராம் பிரிவில் 1ம் இடத்தை க- றமீசும், 2ம் இடத்தை வீ சிவரூபனும், 3 ம் இடத்தை ம- முருகையாவும் பெற்றனர்-

56 - 59 கிலோகிராம் பிரிவில் 1ம் இடத்தை சி சுகுணதாசும், 2ம் இடத்தை ந அருளானனும் 3ம் இடத்தை வ- அருட்செல்வனும் பெற்றனர்.

60- 63 கிலோ கிராம் பிரிவில் 1ம் இடத்தை சோ. சுகாகரும்2ம்இடத்தை து. அருமைத்துரையும் 3ம் இடத்தை க தனபாலசிங்கமும் பெற்றனர்.

64 - 68 கிலோ கிராம் பிரிவில் 1ம் இடத்தைத ஜெயமும் 2ம் இடத்தை பா-பாலச்சந்திரனும் பெற்றனர்

## கப்டன் குணசிங்கம

75 - 80 கிலோ கிராம் பிரிவில் 1ம் இடத்தை ந. ஜெகதீஸ்வரனும்- 2ம் இடத்தை சு- செல்வச்சந்திரனும் பெற்றனர்-

யாழ் மாவட்டத்தில் இவ் விதமாக குத்துச்சண்டை மல் யுத்தம் ஆகியவற்றில் டிரந்த அடிப்படையில் போட்டிகள இடம்பெற்றமை இதுவே முதல் தடவையென்பது பெருமைப்படக் கூடிய விடயமாகும்.

## 17 வயதுக்கு கீழ்

இப்போட்டிகள் அனைத்தும் பருத்தித்துறை பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு.வே, தி.செல்வரட்ணம் அவர்களின் தலைமையில் உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்திருநா. ச.பாலசுப்பிரமணியம் அவர்களின் ஒருங்கமைப்பிலும் திரு,ரி இரட்ணசிங்கம் திரு,க,ராஜாராம் திரு கே,பாலசுப்பிரமணியம், திரு.சிவதயாபரன் திரு மதியமுகன் ஆகிய தீர்ப்பாளர்களின் தீர்ப்புடன் உதைபந்தாட்டப் போட்டிகள் அனைத்தும் நிறைவு பெற்றன.

# பொன்னணிகள் மோதல்; பற்றீசியன் வெற்றி வாகை

வண பிதா மதுர நாயகம் (முன்னாள் சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர்) அவர்களின் ஞாபகார்த்தமாக வருடாந்தம் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிகளுக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் (Battle of The Golds பொன்னணிகளின் மோதல் என்று அழைக்கப்படும்உதைபந்தாட்டப்போட்டி கடந்தவாரம் வட்டுயாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் பெரும் திரளான மக்கள் மத்தியில் வெகு சிறப்பாக நடைபெற்றது

முதலில இடம்பெற்ற 3வது பிரிவு ஆட்டத்தில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல்கணக்கில வென்றது இவ்வாட்டத்திற்கு நடுவராகதிரு கிருபாகரன் கடமையாற்றினார்

அதனைத் தொடர்ந்துஇடம்பெற்ற 2வது பிரிவு ஆட்டம் இரு அணிகளும் கோல் எதையும் போடாததினால் வெற்றி தோலவியின்றி சமமாக முடிவுற்றது இவ் ஆட்டத்திற்கு நடுவராக திரு செ பமாலை முத்து கடமையாற்றினார்

இரசிகப்பெருமக்கள் இடையிடையே பெய்த மழையையும் பொருட்படுத்தாது ஆவலுடன் காத்திருந்த முதலாவது பிரிவு ஆட்டம் சரியாக 4 25 மணிக்கு ஆரம்பமானது இரு அணிகளும் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுக்காமல் வெகு துரிதமாக ஆடி இரசிகர்களை மகிழ்வித்த போதிலும்கோல் எதனையும் இடைவேளை வரை போட இயலாவது போய்விட்டது

இடைவேளையின் பின் சென் பற்றிக்ஸ் அணிவிரன் மகேந்திரராஜா வெகு நுட்பமாக ஆடி முதலாவது கோலைத தனது அணிக்குப் பெற்றுக் கொடுத்தார். அதன்பின் யாழ்பாணக் கல்லூரி அணிவிரர்கள் தம்மால் இயன்றளவு முயற்சியெடுத்தும் இயலாது இருந்த வேளையில் பற்றிக்ஸ் அணிக்கு ஒரு பெனால்டி உதை கிடைத்தது: அதனை எந்த வித பரபரப்பும் இல்லாமல் விரன் லொயின்ரன் அடித்து இரண்டாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

அதன்பின் யாழ்ப்பாணக் கல்லூரி அணிவிரர்கள் தமது வியூகத்தை மாற்றி முழுப் பலத்தையும் பிரயோகித்து கோல் போட எடுத்த பல எத்தனங்களை, சென். பற்றிக்ஸ் பின்னணி விரர்கள் ரெட்ணகுமார் அரவிந்தன் ஈழவேந்தன் ஆகியோர் மிக நுட்பமாக தடுத்து இரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப்பெற்றனர்-

ஆட்டம் வெகு பரபரப்பாக இருந்த இவ்வேளையில் சென்-பற்றிக்ஸ் அணியின் தலைவன் அன்றுமீடன் வெகுசிறப்பாக ஆடி மூன்றாவது கோலைத் தமது அணிக்குப் பெற்றுக் கொடுத்தார். கோலின் எண்ணிக்கை 3:0 என்ற நிலையில் இருந்த போதிலும் யாழ்ப்பாணக் கல்லூரி அணி வீரர்கள் சிறிதும் மனம் தளராது எதிர் அணியினரின் கோல் பரப்பை ஆக்கிரமித்தவண்ணம்இருந்த போது கோல் போட கிடைத்த இரு சந்தர்ப்பங்களை நழுவவிட்டமை குறிப்பிடத்தக்கது,

ஆட்டம் முடிவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கையில சென்-பற்றிக்ஸ் அணி வீரன் மகேந்திரராஜா மீண்டும் ஒரு கோலைப்போட்டு 4 0 என்ற கணக்கில் தமது அணியின் வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டார் இவ் ஆட்டத்தின் விசேட அம்சம் என்ன வென்றால் பற்றிக்ஸ் அணியினர் 4 கோலைப் பெற்றிருந்த நிலையிலும் கூட யாழ் கல்லூரி அணி வீரர்கள் எந்தத் தருணத்திலும் சோர்ந்து விடாமல் கடைசி நிமிடம் வரை போராடிக்கொண்டிருந்தமையே

இவ் ஆட்டத்தில் சிறந்த ஆட்டக்காரருக்கான பரிசை சென். பற்றிக்ஸ் அணி வீரன் லொயின்ரன் பெற்றார்

இவ் ஆட்டத்திற்கு மெச்சத்தக்க விதத்தில் நடுவராக திரு- சண் தயாளன் கடமையாற்றினார்


**1 ம் ஆண்டு நினைவஞ்சலி**

**2-ம் லெப்.சிவகுமாரன்**

கு.சத்தியேந்திரா

பாசமிகு பவாக்குட்டியே!

பூநகரிப்போர்க்களத்தில் பூகம்பமாய்
பூவாய் மலர்ந்த உத்தமனே
நாட்டு மக்களுக்கோர் மாவீரனாய்
நாம் மனம்கலங்கிட-வீரத்துடன்
எங்கு சென்றாய் சிவகுமாரா!
உன் வெற்றி நிச்சயம்-மீண்டும்
எம்மிடம் வருவாய் என்று
ஏங்கி நிற்கின்றோம்

இங்ஙனம்
ச.இராசரெத்தினம்
க.பரமலிங்கம்

(10084)



காரைநகர்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)
374, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

**முக்கிய அறிவித்தல**

**வருடாந்த பொதுக் கூட்டம்**

மேற்படி கூட்டம் பொதுச் சபை உறுப்பினர்கள் பலரின் வேண்டுகோளுக்கு இணங்க 17-11-1994-ல் நடைபெறமாட்டாது. கூட்டத்திற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

12-11-94
(சி-10703)
க. நடராசா
செயலாளர்



நான்கு வருட இடைவெளிக்குப் பின்
**நாகம்ஸ் பாட்டா ஸ்தாபனத்தார்**

மீண்டும் பாட்டா கம்பனியாரின் உத்தரவாதம் பெற்ற விற்பனையாளராக

திங்கட்கிழமைமுதல் 14 . 11 . 94
விற்பனையை ஆரம்பிக்கின்றார்கள்.

பாட்டா கம்பனியாரால் குறிக்கப்பட்ட விலையிலேயே விற்பனை, நாகம்ஸ் பாட்டாவில் வாங்கப்படும் பாட்டா பாதணிகளுக்கு பாட்டா கம்பனியினரால் மூன்றுமாத உத்தரவாதம் வழங்கப்படுகிறது.

**நாகம்ஸ் பாட்டா**

சுன்னாகம்

**நாகம்ஸ் பாட்டா யாழ். கிளை,**
34, சந்தோசம் (கஸ்தூரியார்) வீதி,
யாழ்ப்பாணம்.

(10089)



**பூநகரியில் வரலாறு படைத்த காவிய நாயகன்**



மண்ணில்:
06 - 06 - 1975

மண்ணிற்காக:
13 - 11 - 1993

**லெப்டினன்ட் நேரியன்**
கந்தையா ஜெகதீஸ்வரன்

தமிழீழ மண்ணை விடுவித்து, மக்களை
வாழவைத்து, எம் வருங்காலச்
சந்ததி வாழ, தம்மை ஆள
என்ற லட்சியத்தைச் சுமந்த,
உம்மை நினைவுகூர்ந்து
உமது சுவட்டைத் தொடர்கிறோம்;

மறவன்புலோ,
சாவகச்சேரி
(10086)
- குடும்பத்தினர்



**விண்ணுக்கோர் விரைவுமடல்**



ஊற்றாக
01-12-1933
காற்றாக
25-10-1993

**திரு. செல்லையா
அப்புத்துரை அவர்கள்**
இளைப்பாறிய உபஅதிபர்

இனியவரே,
வடம் பிடித்து வாழ்வினையே வளமாக்கி எம்மனதில்
இடம்பிடித்து இணையில்லா இல்வாழ்வை இலதாக்கி
விடம்பிடித்தகண்டனவன் வினைதீர்க்கும்முடிவில்லாத்
தடம்பிடித்துப் போனீரோ தசைசார்ந்த எம்தலைவ

'பிருந்தாவன்'
உடுவில் மேற்கு,
சுன்னாகம்;

என்றும் நினைவுடன்
மனைவி,மகன் ,மகள்
(10096)



**நினைவலைகள்**



**2-ம் லெப். சிவகுமாரன்**
குழந்தைவேலு சத்தியேந்திரா

பவா......
அன்னை ஊட்டிய வீரப் பால்
தந்தை ஊட்டிய தமிழ் அறிவு
அண்ணன் காட்டிய சுதந்திரப் பாதை
அணிவகுத்து நின்றதோ ஆயிரம்சேனை

கட்டுப்பாடுகள் வேதங்கள் ஆயின
சட்டதிட்டங்கள் சரித்திரம் ஆகின
பேச்சும் மூச்சும் சுதந்திரமே என்றன
பேசும் விழிகள் நெருப்பைக் கக்கின

விமானக் குண்டுகள் விளையாடி மகிழ்ந்தன.
வீடுகள் தோறும் அழுகுரல் கேட்டன
அகதிகள் வாழ்வில் அவலங்கள் நெளிந்தன
புனர்வாழ்வுப் பணிகள் விரும்பியே அழைத்தன

கொடுத்த பணி எடுத்த பணி எதிலும் வெற்றி
ஏற்றதொரு வேங்கை என இவனைப் போற்ற
விடுதலையின் தேடலை விழிகளில் நிறைத்திட்டே
களம் பல கண்ட காளை 'தவளை'யில் சங்கமம் ஆனான்

சத்திய வேள்வியில் திபங்கள் இன்னும் தேவை
சரித்திர நாயகர் திரளட்டும் புனித பாதை
மண்ணுக்காய் மரிக்கின்ற மாவீரர் தருவது எதை?
தங்கத் தமிழ் ஈழம் மலர்ந்துவிடும் நாளை

உனது புனித பாதையை நோக்கி

நண்பர்கள்

(10087)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மாவீரனுக்கு
வணக்கம்

குழந்தைவேலு
சத்தியேந்திரா

இரண்டாம் லெப்.

சிவகுமாரன்

வீரச்சாவு எய்தி ஓராண்டு ஆகிவிட்டது. மாவீரனாகி விட்ட இந்தப் பிள்ளையினுடைய நினைவு எம் மனதிலே நீங்காத இடம் பெற்றுவிட்டது தன்னுடைய மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் தன் இன்னுயிரைக் கொடுத்த இந்தப் பிள்ளையும் இவன் போன்ற பிள்ளைகளும் வரலாற்று நாயகர்களாகி விட்டனர் அவர்கள் வீரக் கற்களிலே உறையும் தெய்வங்களாகி விட்டனர்.

மாவீரன் சிவகுமாரனுக்கு எம்முடைய வணக்கத்தினைச் செலுத்துகிறோம்.

பேராசிரியர்


அ. சண்முகதாஸ்

---

பூநகரி - நாகதேவன் கூட்டுத்தள தகர்ப்பின் போது இவருடன் வீரச்சாவை தழுவிக் கொண்ட அனைத்து மாவீரர்களுக்கும் எமது ஓராண்டு நினைவு அஞ்சலிகள்.



(சி-10701)



தாயின் மடியில்
29 - 12 - 1975

தாயக மண்ணில்
13 - 11 - 1993

பூநகரி - நாகதேவன்துறை கூட்டுப்படைத் தள
தகர்ப்பின்போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட

## 2-ம் லெப்டினன்ட் சிவகுமாரன்

## (குழந்தைவேலு சத்தியேந்திரா)

வேலணை . கொக்குவில்

### வீரனே! மாவீரனே!...

சிந்தையிலே நிறைந்தவனே! சிவகுமாரா!!
சீரோடு வாழ்ந்தவனே சிவகுமாரா!
குழந்தையவன் பெற்று நின்ற இளங்குமரா!
குற்றமில்லா மனமுடைய குழந்தைச் செல்வா!
எந்தையினம் வாழ்வதற்கு எதிரியுடன் போராடி
- தமிழர்
சிந்தையிலே இடம்பெற்றாய் வீரனாக -மாவீரனாக
எந்தை இனம் ஏற்றமுடன் வாழ்வதற்கு
எதிரிகளை ஓலமிட்டு ஓடவைக்கும் ஒப்பற்ற
- தலைவன்வழி
வந்தனைகள் செய்து களம் நோக்கி
சென்றனையோ? -
தந்தனையோ நாம் வாழபெருவெற்றிநம் மினம் மீள

அதிபர் - ஆசிரியர்கள்
புதிய உயர் கல்லூரி

13-11-94 (ஞாயிற்றுக்கிழமை) இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு நாள் நிகழ்வில் இடம்பெறும் மதியபோசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறு போராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

63/2, கே. கே. எஸ். வீதி.
கொக்குவில்.

திரு, திருமதி
குழந்தைவேலு
குடும்பத்தினர்

### இனிய செல்வமே எங்கு சென்றனை

அன்பு மைந்தனே அழகு ரூபனே
அரிய செல்வமே ஆற்றல் மிக்க எம்
சுந்தரத் தமிழ் வடிவமே சுகம்
யாவும் ஈழமாய்க் கண்ட பாலனே
எந்தையர் மகிழ்வோடு வாழ்ந்த மண்
ஈனர் கைப்பட லாகுமா வென
முந்தினாய் களம் பகைமை வென்றிட
மூட்டினாய் கனல் ஈட்டினாய் புகழ்.

''வீரமில்லை யேல் வாழ்வு இல்லையாம்
விவேகம் இல்லையேல் உயர்வு இல்லையாம்
தீரமில்லையேல் தியாக மில்லையாம்
தியாக மில்லையேல் நாடு இல்லையாம்
சார மற்றதோர் சக்கை யாகவே
தமிழர் வாழ்வதா போர்புரிந்திட
நேரம வந்தது செல்கிறே னென''
நீ நடந்தனை வ ழ்க மைந்தனே;

தந்தை அன்பையும் தாயின் அன்பையும்
தங்கை அன்பையும் அண்ணன் அன்பையும்
இந்த மண்ணிலே வைத்த அன்பையும்
எடுத்து நாசகியே பார்த்தனை; அதால்
சொந்த மண்ணிலே வைத்த அன்புதான்
சுதந்திரம் தரும் சோகம் போக்கிடும்
என்று எண்ணியே களம் புகுந்தனை
இனிய செல்வமே எங்கு சென்றனை;

தங்கமே சத்தியேந்திரா உனை
தாய் மறப்பளா தந்தை யாகிய
நான் மறப்பனா அண்ணன் தங்கையும்
தான் மறப்பரா மனித ரல்லவா!
வான் புகழ்ந்திட நீ நிமிர்ந்தனை
வரலா றொன்றினை நீ படைத்தனை
தேன் தமிழ் ஈழநாடு தான்றிட
தியாகி யாகினாய் வாழ்க செல்வமே;

### நினைவினின்றகலா நினைவு ஆண்டொன்றின் நிறைவு

கோலாகலக் குமரன் குழந்தைவடிவேலனாய்-எம்
குலந்தழைக்க ஆசை மகனாக அவதரித்தோ,
குறை படுவோர் துயர் தீர்க்க நீவிர் ஓடியுழைத்தகதை
உலகம்தான் மறந்திடுமோ உள்ளம்தான் தாங்கிடுமோ.

அடக்குமுறை ஆட்சியிலே அரசுடையோர் கொடுமையிலே
சிக்குண்ட எமதுமக்கள் சீரழிந்த கொடுமைதனை
காணச் சகிக்காது கணமேனும் உறங்காது
மோனச் சிரிப்புடனே முழுமனதாய்ப் பாடுபட்டே
பாலர் மகவெல்லாம் ''பவா'' என்ற பாசமுடன்
நேச உறவாட வாட்டமின்றிச் சேவைசெய்தாய்
புனர்வாழ்வுச் சேவையிலே புரிந்த பணி போதாதென்றோ
போராட்ட வழியினிலே புலியாகிப் பாய்ந்தனையோ

உயிரின் உயிரே உள்ளத்தின் நிறை வடிவே
காலத்தால் அழிந்திடுமோ...காவலா உன் கதை முடிவு-தமிழ்த்
தேசந்தான் மறந்திடுமோ மாவீரா உன் மறவீரம்
நேசத்தால் நிறைந்தவனேபாசத்தைவிதைத்திட்ட பண்பே
ஆறாகிப் பெருகிடுதே அருந்தவமே உன் பிரிவை
தேறாத கண்களுடன் ஆறாத நெஞ்சங்கள்.
ஆண்டொன்று வந்ததையா. அன்பரசே உனைப் பிரிந்து
ஆண்டாண்டு யுகங்கள் அணிதிரண்டு வந்திடினும்
அணைந்திடுமோ உன் நினைவு கலைந்திடுமோ எம்கனவு,
தமிழீழ வரலாற்றில் மறவாத புகழுடனே.
தமிழ் மானம் காத்திடவே
தவமாகி இணைந்தனையோ... தமிழத்தாயின் தவப்புதல்வா,-உன்
நினைவாகி நின்று நிதமும்
சாற்றுகிறோம் மனவாஞ்சலியை,

- ரமணனும் நண்பர்களும்

# நான்கு வேட்பாளர்கள் கட்டுப்பணம் இழந்தனர்

(கொழும்பு)
ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட நான்கு வேட்பாளர்கள் தமது கட்டுப்பணத்தை இழந்து விட்டனர். இவ்வாறு தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. அளிக்கப்பட்ட வாக்குகளில் எட்டில் ஒரு பங்கு வாக்கைப் பெற்றுக் கொள்ளாத காரணத்தால் ஹட்சன் சமரசிங்க, ஏ. ஜே. ரணசிங்க, நிஹால் கலப்பதி ஹரிச்சந்திர விஜயதுங்க ஆகிய நான்கு வேட்பாளர்களும் கட்டுப்பணத்தை இழந்துள்ளவர்களாவர்.

## ஓராண்டு நினைவஞ்சலி



நமக்காக
4-4-1972

நாட்டுக்காக
13-11-1993

### 2.ம் லெப்ரினன்ட் தமிழ்
சுந்தரலிங்கம் இரஞ்சனிதேவி/சாந்தி

இதயத்தின் இரஞ்சனியாய் ஒலிப்பவளே,
நீலாம்பரியிலே நின்னைத் தாலாட்ட, நீயோ!
நித்திரை வேண்டாம், நமக்கு நாடு வேண்டுமென்றாய்
புலியாகப் போரிட்டு புதுமை பல செய்திடவே
களங்கள் பல சென்றிட்டாய்!
தவளையாகி மறைந்திட்டாய்!
சாந்தியடைந்து விட்டாய்!
சரித்திரம் படைத்து விட்டாய்!

தம்பசெட்டி, புலோலி மத்தி, பருத்தித்துறை
பாசமிகு அப்பாவும் பாசமிகு உடன்பிறந்தோரும்:
(9811)

## பூநகரி நாயகர்கள் அனைவருக்கும் ஓராண்டு நினைவலைகள்



### 2-ம் லெப். ஆற்றலோன்

யோகநாதன் (புலிமாமா) மகேஸ்வரன்
(சின்னக் கண்ணன்)

மடியில் மகனாக
13-12-1976

மண்ணில் மாவீரனாக
13-11-1993

எமது இனத்தின் சுதந்திரத்திற்காக,
கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக
தமது இன்னுயிரை அர்ப்பணித்துள்ள
இந்த மகத்தான தியாகிகள் காலம்
காலமாக எமது இதயக் கோயில்களில்
பூசிக்கப்பட வேண்டியவர்கள்
-தமிழீழ தேசியத் தலைவர்

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கங்கள்
இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன வைபவத்தில் அனைத்துப் போராளிகளையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

போராளி புலிமாமா
குடும்பத்தினர்-

இல. 15 லெப். கேணல்
ராதா வீதி,
ஐயனார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
(10070)

## கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)
பெண்கள் அணியும் நகை ஒன்று யாழ் மத்திய பஸ் நிலையத்திற்கு அருகில் சிற்றூர்திக் காப்பாளர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு பஸ் நிலையக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

## திருடியவருக்கு தண்டனை

கடையில் இரவு வேளையில் 5000/- ரூபா பெறுமதியான பொருட்களை திருடியவருக்கு இழப்பீடும் குற்றப்பணமும் கட்டும்படி சாவகச்சேரி நீதிமன்று தீர்ப்பளித்தது.
கண்டிவீதி மீசாலைப்பகுதியில் அமைந்துள்ள முருகன் களஞ்சியத்தில் நைலோன் கயிறு, மண்ணெண்ணெய், தீப்பெட்டி உட்பட மேற்படி பெறுமதியான பொருட்கள் களவாடியவரை சாவகச்சேரி காவல்துறையினர் மன்றில் ஆஜர் செய்தனர்.
மன்றானது குற்றவாளி குற்றத்தினை ஒப்புக் கொண்டதினை அடுத்து நீதியாளர் திரு. க. சுடர் குற்றவாளிக்கு மண்ணெண்ணெய்க்கு இழப்பீடாக 500/-ரூபாவும் குற்றமாக 3000/- ரூபாவும் செலுத்துமாறும் தவறின் 120 நாட்கள் கட்டாய சமூகசேவை எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது. பொருட்கள் யாவும் திருப்பி உரிமையாளரிடமும் ஒப்படைக்கப்பட்டன. (86)

## ஆய்வுக்கிளை கூட்டம்

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தேர்வுக் குழு ஆய்வுக் கிளை ஒன்றை ஆரம்பித்துள்ளது. இதன் பணிப்பாளராக ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஓய்வு பெற்ற அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா அவர்களும் உறுப்பினர்களாக பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு க. சின்னத்தம்பி, திரு சி. சிறீசற்குணராசா அவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். தேர்வுக்குழு நடாத்தும் எல்லாத் தேர்வுகள் தொடர்பாகவும் பலவிதமான ஆய்வுகளை இக் கிளை மேற்கொள்ளும் எனவும், விரைவில் நடைபெறவுள்ள முதநிலை, இளநிலைத் தேர்வுகள் தொடர்பான தொகுப்பறிக்கை தயாரிப்பதற்காக இக் குழுவினர் இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு தமிழீழக் கல்வி மேம்பாட்டு பேரவையின் கேட்போர் கூடத்தில் கூட உள்ளதாகவும் சகல முதன்மைக் கட்டுப்பாட்டுத் தேர்வாளர்களையும் சமுகந்தருமாறும் தேர்வு ஆணையாளர் திரு அ. சண்முகதாஸ் அவர்கள் கேட்டுள்ளார்.

## இலவசமாக மூக்குக்கண்ணாடி

(கொழும்புத்துறை)
வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு அவர்களின் நன்மை கருதி முன்னுரிமையாக கண் வைத்திய பரிசோதனை செய்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்கவுள்ளனர். (24)

## யாழ். பல்கலைக்கழகம் மகாபொல கொடுப்பனவு

முதலாம் வருட மாணவர்களுக்கான 5-ம் தவணைப்பணமும், ஏனைய வருட மாணவர்களுக்கான 8-ம் தவணைப் பணமும் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக்கிளையில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவிற்கான நேர அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தல் பலகைகளில் இடப்பட்டுள்ளது.

பதிவாளர்
(சி-10696)

## ஓராண்டு நினைவஞ்சலி



தாய் மடிக்காக
26-3-1969

தமிழீழ மண்ணுக்காக
26-11-1993

### தம்பித்துரை மோகன்
2-ம் லெப்டினன்ட் செங்கதிர்/நிரூபன்

"தானைத் தலைவனின் சேனைப் படையில்
செங்கதிர் ஆனவனே."

பூநகரிக் கடற்படைக்கு புலியாகச் சென்று,
புயலாக வீசியதால் பூநகரிக் கடலிங்கே
உன் புகழ்பாடி நிற்கின்றதோ

மண்ணுக்காக வித்திட்டு நீ மாவீரனானதை
மறக்குமா இம் மறவர் குலம் உள்ள மட்டும்

செங்கதிர் உன் சிந்தனையில்
வெந்தணலில் எமை வேக வைத்துவிட்டு
சென்றாயே
ஓராண்டுப் பூர்த்தியிலும் ஒலிக்குதடா - உன்
குரல் இங்கே

இவருடன் வீரச்சாவடைந்த வீரவேங்கைகளுக்கும் எம் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம் [நாளை] 14-11-94 இல் எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் அன்னாரின் ஓராண்டு திதியின் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்திபடைய பிரார்த்திக்கும்
அன்பின் அம்மா, சிறியதாயார் சரஸ்வதி
அண்ணன் பரஞ்சோதி, அண்ணி உமாதேவி
பெறா மக்கள், அக்கா சிவசக்தி மற்றும்
உற்றார், உறவினர்.

141/4, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(10018)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயக மடியில்
1972.01.10

தாயக விடிவில்
1993.11.13

### கப்டன் இளையராஜா
ஸ்ரனிஸ்லாஸ் மோகன்ராஜ்

மாவீரத் தாரகையே வானத்து ஒளி விளக்கே!
கல்லூரிப்படிப்பை நீ களைந்தெறியக் காரணமென்
தன்னாதிக்க வெறியினால் ஊளையிட்ட சிங்களத்தின்
கூச்சலிட்ட ஒலி உன் செவியில் விழுந்ததாலோ

பைந்தமிழ் இன்தமிழ் செந்தமிழ் நற்றமிழ்
என்றெல்லாம் புகழ்ந்துரைத்த எம் தமிழ்த்தாயின்
மேனியை

சிதைத்தெறிய முற்பட்ட சிங்களத்தின் புன்செயலை
சீரிய உன் விழிகள் நேரிலே கண்டதாலோ

விரைந்து வேங்கையாய் சினந்து எழுந்தனையோ
மணலாறுப் பயிற்சிப் பாசறையில் சேர்ந்தனையோ
களம் பல கண்டு சிரம் பல கொய்த நீ
நீரிலும் நிலத்திலும் சாகசம் செய்து பூநகரிக்
களத்தினிலே மாவீரனானாயோ!

விடியலைத் தேடிப் புறப்பட்ட வீர வேங்கையே!
மாவீர மலர்களைக் கோர்த்த மலர் மாலையிலே
நீயும் ஒரு மலராகி வாசமணம் பரப்புகிறாய்
மானிடர்கள் என்றென்றும் மரணிக்கிறார்கள்
மாவீரர்கள் என்றுமே மரணிப்பதில்லை.

பூநகரி முகாம் தகர்ப்பின் போது இவருடன் வீரச்சாவடைந்த வீர வேங்கைகளை இந்நாளில் நினைவு கூருகின்றோம். 1994-11-16-ம் திகதி புதன்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு அஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உறவினர்கள், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சட்டைக்காடு,
முள்ளியான் தாளையடி.

பெற்றோர், சகோதரி,
உறவினர்.
(10050)

## 2.ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
22-06-1916

மறைவு:
05-11-1992

### அமரர் வேலுப்பிள்ளை நாகமணி
(இ. போ. ச சாரதி)
திதி 13-11-1994

உழைப்பினால் உயர்ந்திட்ட உத்தமரே
உமை நினைந்தே வாழ்கின்றோம்
ஆண்டுகள் இரண்டு உருண்டோடினும்
ஆறிடுமோ எம் நெஞ்ச துயரம்
எங்கு நீர் சென்றாலும் - ஐயாவே
எங்கள் நினைவு எல்லாம் உம்முடனே
உம் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.


அன்பு - மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

449 இராமலிங்கம் றோட்
நல்லூர் யாழ்ப்பாணம்
(10082)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
15-11-1915

ஆண்டவன்
அடியில்
15-11-1989



### டாக்டர் வி. ஜே. ஞானநாயகம்

"சிலப்புயல் அடிக்க
புகலிடம் தாருமே
நான் மோட்சகரையேற
அருள்செய்யும் கர்த்தரே"

நாளை (14-11-94) திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஞாபகார்த்த ஆராதனையில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

"ஞானமகால்"
8813, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(10071)

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
அன்பார்ந்தவர்கள்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மண்ணில்:
17-08-1966

தாயக மண்ணில்:
11-11-1994

### கப்டன் சுருளி (பேரின்பம்)
இராசு வசந்தமோகன்

தீச்சுடர் ஏந்தித் திரிந்த புயலே
புலிப்படையில் பூத்த புரட்சிப் பூவே
தேச விடுதலை சுமந்த புலியே
உந்தன் கனவினை தோள்களில் ஏற்றி
எங்கள் பயணம் தொடரும்.

பூநகரிச் சமரில் இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அனைத்து மாவீரர்களுக்கும் எமது கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்;

செல்வபுரம்
உரும்பராய் தெற்கு.
உரும்பராய்

தாய், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்
நண்பர்கள்
(10081)

**சிந்தனைக்கு.**

தன் இச்சைகளை நிறைவு செய்வதன் மூலம் எய்தக் கூடியது அல்ல இன்பம். ஓர் உன்னதக் குறிக்கோளுக்கு உண்மையாய் இருப்பதன் மூலம் எய்தக் கூடியதே அது.

- ஹெலென் கெல்லர்.


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 13-11-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05


# இனப்பிரச்சினையும் புதிய ஜனாதிபதியும்

சிறிலங்காவின் நான்காவது ஜனாதிபதியாக சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா நேற்றுக் காலை பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். உலகின் முதலாவது பெண் பிரதமரின் மகளான சந்திரிகா குமாரதுங்கா சிறிலங்காவின் முதலாவது பெண் ஜனாதிபதியாகப்பதவிஏற்றுள்மை பண்டாரநாயக்கா குடும்பம் சிறிலங்கா அரசியலில் பெற்றுவிட்ட முக்கியத்துவத்தின் வெளிப்பாடுஎன்றே கூறமுடியும்.

ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கடந்தகால ஆட்சியை ஒரு இருண்ட யுகம் என வர்ணித்த அதே வேளை ஓர் அச்சமற்ற சுதந்திரமான ஜனநாயக ரீதியிலான சமத்துவமான ஆட்சியை நிறுவப் போவதாகவும் மக்களுக்கு உறுதியளித்தார்; இந்த வகையில் இனப்பிரச்சினை தீர்விற்கான சமாதானப் பேச்சுக்களைக் கைவிடுவதற்கு எந்தவித காரணமும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் இவ் அறிவிப்பானது இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் தொடரும் என்றே நம்புவதற்கு ஏதுவாகின்றது. இந்நிலையில் கடந்த மாதம் இடைநிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் விரைவில் தொடங்கப்படலாம் என ஊகிப்பதற்கும் வாய்ப்புக்களே உள்ளன.

ஆனால் கடந்த மாதம் இடம்பெற்ற பேச்சுவார்த்தைக்கும் இனிமேல் இடம்பெறவுள்ளதாக எதிர்பார்க்கப்படும் பேச்சுவார்த்தைக்கும் இடையிலான அரசியற் சூழ்நிலை கணிசமான அளவில் வேறுபட்டதாகும்; அதாவது பொதுஜன ஐக்கிய முன்னணி கடந்த ஆகஸ்ட் மாதத்தில் அரசாங்கத்தை அமைத்துக் கொண்டாலும் நேற்று சந்திரிகா குமாரதுங்கா பதவி ஏற்ற பின்னரே அரசாங்கத்தின் முற்றுமுழுதான அதிகாரங்களும் அவர்களின் கைகளுக்குக் கிட்டியதெனலாம்;

கடந்த காலச் சமாதானப் பேச்சுக்களின் போது சந்திரிகா குமாரதுங்கா முற்றுமுழுதான சுதந்திரத்துடன் செயற்பட முடியாமல் போனது என்றே தெரிவிக்கப்பட்டது. ஆனால் இனி அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறுமானால் ஜனாதிபதி சந்திரிகா முற்றுமுழுதான அதிகாரத்துடன் செயற்பட முடியும்.

இந்தவகையில் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தை மிகவும் முக்கியமானவையாக எதிர்பார்க்கப்படுகின்றது; ஏனெனில் அப்பேச்சுவார்த்தையில் அரசாங்கத்தின் நிலைப்பாடு பற்றிய தெளிவான முடிவுகள் முன்வைக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது. குறிப்பாக முதற் கட்டப் பேச்சுக்களில் விடுதலைப்புலிகள் வற்புறுத்திய போர் நிறுத்தமும், போக்குவரத்துப் பாதை தொடர்பான விவகாரத்திலும் அரசாங்கம் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்திட வேண்டி வரும்.

ஏனெனில் கடந்த பேச்சுவார்த்தையில் பின்னடித்தது போன்று இவை ஜனாதிபதியுடனும், பாதுகாப்பு அமைச்சுடனும் சம்பந்தப்பட்ட விடயம் எனக் கூறிவிட முடியாது. அத்தோடு விடுதலைப்புலிகள் வற்புறுத்தியுள்ள போர்நிறுத்தமும், பாதை திறப்பும், பொருளாதாரத்தடை நீக்கமும், சமாதான சூழ்நிலை ஒன்று உருவாவதற்கும் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிப்பதற்கு அவசியம் என்பது அரசாங்கத்தரப்பினாலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் அரசாங்கத்தரப்பு பல தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் அளித்த வாக்குகள் மூலம் பேரினவாதிகளின் கூச்சலைச் சந்திரிகா குமாரதுங்கா வசல் சற்று தணிக்க முடிந்ததாயினும் இன்று சிறிலங்கா அரசியலில் பலம் பெற்றுவிட்ட ஒரு சக்தியாக வளர்ந்து விட்ட இராணுவத்தின் நிலைப்பாட்டில் மாற்றத்தை அவர் இனிமேல் தான் கொண்டு வரவேண்டும்.

இதேசமயம் இராணுவத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் கொண்டு வர வேண்டுமானால் இராணுவக் கட்டமைப்பிலும், பாதுகாப்பு அமைச்சிலும் பாரிய மாற்றங்களைக் கொண்டு வர வேண்டிவரலாம். அப்பொழுதே அவரின் பணிப்புக்கள் ராணுவத்தால் ஏற்கப்படும் அதே சமயம் இம்மாற்றத்தைக் கொண்டே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இனப்பிரச்சினை விவகாரத்தில் சமாதானத் தீர்விற்கு எத்தகைய முக்கியத்துவம் கொடுக்கப் போகின்றார் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்த நிலையில் இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வின் அடுத்த கட்ட நடவடிக்கையை ஜனாதிபதி சந்திரிகாவே ஆரம்பிக்க வேண்டும். இதில் அவர் இராணுவத்தரப்பை எவ்வாறு கையாளப் போகின்றார் என்பதைப் பொறுத்தே சமாதானத்தின் மீது அவர் வைத்துள்ள நம்பிக்கை வெளிப்படும். ஏனெனில் ஜனாதிபதி பதவி ஏற்பதற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்னர் இராணுவத்துடன் அவர் செய்து கொள்ள முற்பட்ட சமரசம் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணும் விடயத்தில் நல்ல சமிக்ஞை என்று கூறுவதற்கில்லை

# திருமதி சந்திரிகாவின் பதவி ஏற்பு அரசியலில் புதிய ஆரம்பத்தின் அறிகுறி

திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா சிறிலங்காவின் நான்காவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாகவும், முதலாவது பெண் ஜனாதிபதியாகவும் பதவி ஏற்றுக் கொண்டு விட்டார். அரசியற் பாதையில் எதிர்ப்பட்ட தடைகளையும், போடப்பட்டிருந்த முட்டுக்கட்டைகளையும் தாண்டி, சுமார் இருபது லட்சம் அதிகப்படியான வாக்குகளால் இவர் வெற்றி பெற்றிருப்பது ஓர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு தான்.

பதினேழு வருட காலம் நீடித்த ஐ. தே. கவின் ஆட்சிக் காலத்தில் பல்வேறு வழிகளிலும் அடக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கைக் குரலாகவும், மனித உரிமைகள் மறுக்கப்பட்டு அப்பாவித்தனமாகக் கொல்லப்பட்டவர்களின் அவலத்தை வெளிப்படுத்தும் குரலாகவும், வறுமையினாலும், வேலை இல்லா திண்டாட்டத்தாலும் துன்பப்பட்டவர்களின் விடிவுக்கான குரலாகவும் தன்னை இனங் காட்டி வந்த திருமதி சந்திரிகாவின் வெற்றி சிறிலங்கா அரசியலில் புதிய பரிமாணம் என்றே கொள்ள முடியும்;

1993 ஜூலையில் மேல் மாகாண முதல்வராக பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட திருமதி சந்திரிகா தென் மாகாண சபைத் தேர்தல் முடிவின் மூலம் தனது நிலையை மேலும் உறுதிப்படுத்தி 94 ஆகஸ்டில் பிரதமர் பதவிக்கும் தெரிவாகி இருந்தவர். அதாவது சுமார் ஒன்றரை வருடகாலத்தில் நிறைவேற்று அதிகார முடைய ஜனாதிபதியாகக் கிடுகிடுவென அவர் உயர்ந்துள்ளார்; எனினும் திருமதி சந்திரிகாவின் அரசியல் வாழ்வு என்பது இந்த ஒன்றரை வருட காலத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல; பதின் நான்கு வயதில் தந்தையை இழந்தது முதல் நாற்பத்தி ஒன்பது வயதில் ஜனாதிபதியாகுவதற்கு இடையில் அவர் சந்தித்து விட்டிருந்த நெருக்கடிகளும் அனுபவித்த துயரங்களும் சோகமான அனுபவங்களாக விரியக் கூடியவையாகும். எனினும் அவை பற்றிய ஆராய்ச்சிகளுக்கு அப்பாற்பட்டு எதிர்காலம் குறித்து நோக்குவதே இப்போது பயன்பொருத்த முடையதாக இருக்கக்கூடும்!

## அரசியல் யதார்த்தம்

ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றுவதை தவிர ஏனைய அனைத்து அதிகாரங்களையும் சிறிலங்காவின் 1978ம் ஆண்டின் அரசியலமைப்பு ஜனாதிபதிக்கு வழங்கியிருப்பதாகக் கூறப்படுவதுண்டு. இத்தகைய அதிகாரம் வாய்ந்த பதவியின் கீழ் நாடு ஆளப்படக் கூடாது என்பதில் திருமதி சந்திரிகா நம்பிக்கை கொண்டிருப்பவர்; அதிகாரம் அனைத்தும் ஒரு தனி மனிதரிடம் குவிக்கப்பட்டு சர்வாதிகார ஆட்சி ஒன்றுக்கு இந்த ஜனாதிபதி ஆட்சி முறை இட்டுச் செல்லும் என்றும், இதனால் இந்த ஆட்சி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்றும் அவர் இதுவரை வற்புறுத்தி வருகின்றார்.

ஆனால் இதுகால வரையிலான அரசியலமைப்பு மாற்றங்களை யாவும் சிறுபான்மை இனங்களை குறிப்பாக தமிழ் பேசும் மக்களை குறி வைத்து தாக்குபவையாக இருந்துள்ளமை கண்கூடு இதனால் தான் அரசியலமைப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்ட ஒவ்வொரு தருணத்திலும் தமிழ் மக்கள் தமது எதிர்ப்பை தெரிவிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர் ஆனால் தமிழ் மக்களின் எதிர்ப்பை ஆயுத முனையில் நசுக்கிக் கொண்டு அறிமுகமாக்கிய அரசியலமைப்புக்கள் பெரும்பான்மை மக்களின் நாளாந்த வாழ்க்கையிலும் பாதிப்புக்களை ஏற்படுத்திய அனுபவத்தின் ஊடாக இப்போது புதிய மாற்றத்தின் குரல் ஒன்று ஒலிக்கின்றது.

குறிப்பாக பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற சட்டங்களின் கொடூரமும் பற்றி இப்போது விலாவாரியாக விளக்க வேண்டியது அவசியம் இல்லை ஏனெனில் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களின் உயிர்களைக் காவு கொள்ளப்படுவதற்கு இச் சட்டம் காலகோலாகியிருப்பது அனுபவமாகியிருக்கிறது.

ஆக அரசியலமைப்பையும், ஆட்சிமுறையையும் நீக்குவதற்கு காலக்கெடு விதித்து (ஜூலை 15க்கு முன்பாக) தீவிர செயற்பாட்டில் ஈடுபட முனைப்புக் காட்டும் ஜனாதிபதி திருமதி சந்திரிகா கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் அனைத்து தரப்பினரையும் தம்பால் ஈர்க்க முயற்சி எடுப்பார் என்றே எதிர்பார்க்க வேண்டியுள்ளது அல்லாவிடில் பெரும்பான்மையினரின் நலன்களைப் பாதுகாப்பதை மட்டும் முன்நிறுத்தி ஏனைய மக்களின் வேணவாக்கள் புறக்கணிக்கப்படும் நிலை காணப்படுமாயின் இன்றைய நிலை நீடிப்பதை தவிர்க்க முடியாது போய்விடும் எனலாம்.

சுருக்கமாகக் கூறினால் 1978ல் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பின் கீழ் முதலாவது ஜனாதிபதி தேர்தல் 1982ல் இடம் பெற்ற போது சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கி முனைகள் மக்களை நோக்கி நீண்டிருந்தது. இரண்டாவது ஜனாதிபதி தேர்தல் 1988ல் இடம்பெற்ற போது தமிழர்களின் தாயகப் பகுதி எங்கும் இந்திய இராணுவத்தின் சப்பாத்துக் கால்கள் பதிந்து போயிருந்தன மூன்றாவது ஜனாதிபதி தேர்தலை தமிழர் தாயகப் பகுதிகளில் நடத்தவே முடியாதநிலை.

எனவேதான் இன்றைய அரசியல் எதார்த்த நிலையை முழுமையாக ஏற்றுக் கொள்வதே தீர்வு நோக்கிய திசையில் முதலாவது படி ஆகும். எனலாம் அதற்கு மறுதலையாக சிறிலங்கா இராணுவத்தின் பிரசன்னத்தை ஏற்படுத்துவதே முதன்மையாகக் கொள்ளப்படின் கண்ணீரும் செந்நீரும் சிந்தும் நிலை நீடிக்கக்கூடியதாகிவிடும்.

## இனப்பிரச்சினைக்கான தீர்வு நோக்கிய திசையில்...

இலங்கையில் இருக்கும் அதி முக்கியம் வாய்ந்த தேசியப் பிரச்சினையாக இனப்பிரச்சினையே நிலவுகின்றது என்பதையும் அதனை அரசியல் ரீதியிலான பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு நோக்கி நகர்த்த வேண்டும் என்பதையும் திருமதி சந்திரிகா வெளிப்படையாக ஏற்றுக்கொண்டிருப்பது குறிப்பிடக் கூடிய ஒரு விடயமாகும்.

இனப்பிரச்சினை என்பதே இங்கு இல்லை என்றும், விடுதலைப்புலிகளின் தலைமையில் தமிழர்கள் நடத்தும் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை கொச்சைப்படுத்தி அதனை இராணுவ ரீதியில் நசுக்கிவிட வேண்டும் என்றும் கூச்சலிட்டுக் கொண்டிருந்த பேரினவாதிகளின் மத்தியில் திருமதி சந்திரிகாவின் குரல் சற்று வித்தியாசமாகவே ஒலித்தது.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி அமைத்ததும் இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கிய திசையில் விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சுக்கள் நடத்துவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டதையும். அரசின் தூதுக்குழு யாழ்ப்பாணம் வரை வந்தமையும் இவ் வகையில் முக்கியமானவைதான்.

எனினும் இனப் பிரச்சினைக்கான தீர்வு எத்தகைய வடிவத்தில் மேற்கொள்ளப்படும் என்பது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசினாலோ அல்லது திருமதி சந்திரிகாவினாலோ தெளிவாகப் பகிரங்கமாக்கப்படவில்லை. ஆதலால் இது விடயத்தில் அவர் எவ்வளவு தூரத்துக்கு இணக்கம் கான எண்ணம் கொண்டுள்ளார் என்பதைக் குறிப்பிட்டுக் கூறுவது கடினமானது இருந்த போதும் அதிகாரப் பரவலாக்கல், அல்லது மாவட்ட சபை, மாகாண சபை என்ற எல்லைகளுக்கு அப்பாற்பட்டுச் செல்லவும், சமஷ்டி ஆட்சி என்ற நிலை வரை இட்டுச் செல்லக்கூடியவராக இருக்கக்கூடும் என்றே ஊகிக்க முடிகின்றது. மேலும் சுருக்கின் இராணுவ ரீதியிலான யுத்தமாக வடிவெடுத்திருக்கும் இனப்பிரச்சினை தீர்வுக்கான போராட்டத்தை மீண்டும் அரசியல் அரங்கிற்கு இட்டு வருவதை சந்திரிகா சாதித்துவிடக் கூடும் எனக் கருத இடமுண்டு;

## இராணுவத்தின்மீது அதிருப்தி

காணாமற் போனவர்களின் பட்டியலில் முதலிடம் பெறுபவர்கள் எம்பிலிப்பிட்டியவின் பாடசாலை மாணவர்கள் அல்ல 1979ல் பிரிகேடியர் திஸ்ஸவீரதுங்க தலைமையில் வட பகுதி மீது ஏவி விடப்பட்ட இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற் போனவர்களின் மர்மக்கதை இன்னமும் நீடிக்கின்றது. இது ஒருபுறமிருக்க இன்றும் காணாமற் போனவர்களின் கதை தமிழர் பிரதேசங்களில் தொடர்கதையாகவே தொடர்கின்றது.

மேலும் புதைகுழிகள் இருப்பது சூரியகந்தவிலும் திவுலப்பிட்டியிலும் மட்டும் அல்ல கூட்டம் கூட்டமாக அப்பாவி மக்கள் அரக்கத்தனமாக சிறிலங்கா இராணுவத்தினரால் கொல்லப்பட்டமைக்கு பொக்குவில் தொகுதியின் தம்பவேலாயுதபுரத்திலும் மட்டக்களப்பின் கொக்கட்டிச்சோலையிலும் திருகோணமலையின் துவரங்காடு, மணற்சேனைப் பகுதிகளிலும், வன்னியின் ஒதியமலை மன்னாரின் அடம்பன் பகுதிகளிலும், யாழ்ப்பாணத்தின் வல்வெட்டித்துறை குருநகர் மற்றும் குமுதினிப் படகு என்று சான்றுகள் பல உறுதிக் கொண்டே இருக்கின்றன.

அதாவது 1987 ன் பின்னர் குறிப்பாக 1988, 89, 90 ம் ஆண்டுகளில் இராணுவத்தினரின் தீவிர செயற்பாடுகள் சிங்கள மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ள அதிருப்தியை நன்கு புரிந்து கொண்டிருப்பவராகவே திருமதி சந்திரிகா காணப்படுகின்றார்; எனவே அவரால் 1979-ம் ஆண்டு முதல் இராணுவத்தின் நுகத்தடியின் கீழ் நசுக்கப்படும் தமிழ் மக்கள் மத்தியில் அதற்கு எதிரான உணர்வுகள் எவ்வளவு தூரத்திற்கு ஆழமாகப்பதிந்திருக்கும் என்பதையும் உணர்ந்துகொள்ள முடியும் என்றே எதிர்பார்க்கலாம்;

முடிவாக சுருக்கிக் கூறுவதானால் அரசியலமைப்பை மாற்றுவதற்கான உறுதிமொழி, சகலரதும் அடிப்படை மனித உரிமைகள் பேணப்பட்டு பாதுகாக்கப்படும் என்பதற்கான உத்தரவாதம், இனப் பிரச்சினைக்கு நியாயமான நிரந்தரமான தீர்வு அரசியல் பேச்சுவார்த்தைகளின் ஊடாக எட்டப்படும் என்ற வாக்குறுதி, என்பன போன்ற அம்சங்களே திருமதி சந்திரிகாவின் வெற்றிக்கான அடித்தளங்கள் எனலாம். இவற்றை நிறைவேற்றும் வகையில் எத்தகைய அணுகுமுறைகளை கடைப்பிடித்து தமது இலக்குகளை திருமதி சந்திரிகா எட்டப்போகின்றார் என்பதை எதிர்காலத்தில் தான் பார்க்க வேண்டும். எனினும் நல்லன நடக்கட்டும் என்ற விருப்பத்தை தெரிவிக்கும் வகையில் 'சுப உதாபனக வேவா' (நல்ல பொழுதாக விடிபட்டும்) எனக் கூறுவது பொருத்தமானதே;

**இளையவன்**

# சமாதானத்தின் பாதை கடினமானது ஆனால் முயற்சியை கைவிடப்போவதில்லை

## பதவிஏற்பு வைபவத்தில் சந்திரிகா

(கொழும்பு)

மக்கள் சமாதானத்திற்கும் மானிட பெறுமானத்திற்கும் ஆணை வழங்கியுள்ளனர். மக்களின் தீர்ப்பு சமாதானத்தில் அவர்கள் கொண்டுள்ள விருப்பத்தை பிரதிபலிக்கின்றது ஆனால் இச்சமாதானம் மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினருக்கும் கௌரவத்தை கொண்டுவரக்கூடியதாக இருக்க வேண்டும். சமாதானத்திற்கான பாதை சுலபமற்றது, கடினமானது என்பதை ஏற்கிறேன். இருந்தும் சமாதான முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொள்வேன். இவ்வாறு புதிய ஜனாதிபதியாக நேற்று ஜனாதிபதி செயலகத்தில் பதவியேற்ற பின்னர் திருமதி சந்திரிகா குமாரதுங்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், அரச பயங்கரவாதம், அரசியல் பழிவாங்கல் ஆகிய சக்திகளை மாற்றியமைக்க மக்கள் காட்டிய நம்பகரமான, அமைதியான உறுதிப்பாட்டிற்கும் அரசியல் நுண்ணறிவுக்கும், துணிவுக்கும் நான் இச்சந்தர்ப்பத்தில் தலை வணங்குகின்றேன். பணத்தின் வலிமையால் சாதிக்க முடியாத ஒன்றை நேர்மை- விசுவாசம் - நாட்டு மக்கள் மேல் கொண்டுள்ள அக்கறை ஆகியன வலிமை கூடியன என எனக்கு அறிவூட்டிய எனது தந்தைக்கும் தாயாருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன். எங்கள் ஒன்றுபட்ட அரசியல் வாழ்வில், எனக்கு தைரியத்தையும். ஆதரவையும் தந்து ஊக்குவித்த எனது இனிய கணவர் விஜேயுக்கும் இந்த சந்தர்ப்பத்திலே தலை வணங்குகின்றேன்.

இந்த வெற்றி என்னுடைய வெற்றி மாத்திரமல்ல, சமீப காலத்தில் எனது தாய் நாட்டை சூழ்ந்திருந்த இருண்ட நாட்களில் இலங்கை சமுதாயத்தினராலும் ஒவ்வொருபகுதியினராலும் மேற்கொண்ட கடுமையான உழைப்பு, நிர்ணயம் ஆகியவற்றின் பலாபலனே இந்த வெற்றியாகும்.

ஒரு நாட்டின் மக்கள் சரியான வழியில் ஊக்குவிக்கப்பட்டால் ஆர்வமூட்டப்பட்டால், கடுமையான கொடுங்கோலாட்சியிலிருந்து தமக்காகவும், தமது வருங்காலசந்ததியினருக்காகவும் எவ்வாறு விடுதலை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை இந்த வெற்றியின் பரிமாணங்கள் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றன;

எனது தந்தை எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்காவின் வார்த்தைகளில் குறிப்பிட்டால், எமது மக்களின் வளைந்து கொடுக்காத எவராலும் வெற்றிகொள்ள முடியாத உணர்வு கடந்த பதினேழு ஆண்டுகால அடக்குமுறை ஆட்சிக்கெதிராக சவால் விடவும், நின்று நிலைக்கவும் போதிய வலுவுடையது என்பதை இது நிரூபித்திருக்கிறது.

நமது மக்கள் தமது அன்புக்குரியவர்கள் ஈவிரக்கமின்றி கொல்லப்பட்டதையும், காணாமல் போனதையும் வேதனையோடு மௌனமாக சகித்துக்கொண்டிருக்கிறார்கள், இவ்வாறு ஏறக்குறைய 20 ஆண்டுகளாக நீடித்த மானிட வாழ்க்கை நம்பமுடியாதவாறு, நம்ப முடியாததாகிவிட்டது. அரச பயங்கரவாதம் அதன் கொடிய தலையை நீட்டியது: அது தனது அழிவுகரமான பாதையை சுங்கு தடையின்றி தொடர்ந்தது. குறுகிய சுயநல நோக்கங்களை அடைவதற்காக அரசியலை ஒரு கருவியாக பாவித்த ஒரு கொடிய அரசு ஒழுக்க நெறி, சமத்துவம், நியாயம் ஆகிய சகல அம்சங்களையும் தன்னிச்சையாக மீறியது.

அரசியல்வாதிகள் சட்டத்தை தமதாக்கிக்கொண்ட நிலைக்கு நாம் ஒரு முடிவு கட்டியுள்ளோம். அரசியல் வன்செயல், அரச பயங்கரவாதம் ஆகியவற்றை ஒழிப்பதற்கு எனது அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளை மக்கள் அங்கீகரித்துள்ளார்கள்.

எமது மக்கள் சமாதானத்துக்கும் மனித விழுமியங்களுக்கும் ஓர் ஆணையை வழங்கியுள்ளனர்; துப்பாக்கி வேட்டை, தமது வாக்கால் வெல்ல முடியும் என்பதை உலகுக்கு காட்டியுள்ளார்கள்.

நாட்டின் வடபகுதியில் எழுந்த கிளர்ச்சிகள் பெருமளவு உயிர்களையும் வளங்களையும் அழித்துள்ளன. சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற மக்களின் ஆழ்ந்த விருப்பத்தை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். எமது சமாதான அணுகுமுறைகள் சகல சமூகங்களினதும் கௌரவம், சுயமரியாதை, சமத்துவம் ஆகியவற்றை அங்கீகரிக்கும் அதே வேளை, சிங்கள மக்களின் உரிமைகளை பாதுகாப்பதாகவும் அமையும் இது பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்பதற்கு ஓர் அத்தியாவசியமான அணுகுமுறையாக அமையும்.

நாம் ஜனாதிபதி நிர்வாக முறையை நீக்குவதற்கு தொடர்ந்து உறுதிபூண்டுள்ளோம் என்றார்.

## இந்தியா முக்கிய இடம்

புதிய ஜனாதிபதியாக பதவியேற்றபின் தான் செல்ல விரும்பும் நாடுகளில் இந்தியா முக்கியமான இடத்தை பெறுவதாக திருமதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று நடந்த முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் என இந்திய தொலைக்காட்சி குறிப்பிட்டது.

## இந்திய மீனவர் மீட்பு

இந்திய மீனவர்கள் நால்வரை நேற்று முன்தினம் கடலில் மீட்டுள்ளதாக சிறிலங்கா கடற்படை கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்திற்கு அறிவித்துள்ளது. இம் மீனவர்கள் இயந்திரக் கோளாறு காரணமாக கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த போது மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது;

சிறிலங்கா ஆழ் கடற்பரப்பில்

## கொரியக் கப்பலில் தீ; அணைப்பு முயற்சி தோல்வி

(கொழும்பு)

இலங்கையின் தென்பகுதிக் கடலில் கொரியக் கப்பலொன்று தீப்பிடித்து எரிவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எம். கே. மொங்கோலியா என்ற கொள்கலன் கப்பல் நேற்று முன்தினம்தொட்டு தீயில் எரிந்து வருகின்றது.

கப்பலின் இயந்திர அறையில் ஏற்பட்ட கோளாறே இதற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது காலித் துறைமுகத்திலிருந்து 15கடல் மைல் தொலைவில் இக்கப்பல் தீப்பற்றியது இதனைத் தொடர்ந்து ஜப்பானிய கப்பலான ரென்சான், 20 கொரிய மாலுமிகளையும் கப்பலின் ஆறு சிப்பந்திகளையும் காப்பாற்றியுள்ளது கொழும்பிலிருந்து அதிவேக படகுகள் அனுப்பப்பட்டபோதும் அவற்றினால் தீயை அணைக்க முடியவில்லை.

இதேவேளை இக்கப்பலின் தீயை அணைக்க இரண்டு தீயணைக்கும் படகுகளினால் எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை என்றும் தெரிய வருகின்றது. இ கப்பல் ஜப்பானில் இருந்து குவைத் நோக்கி சென்றது என்றும் கூறப்படுகிறது.

# தற்கொலைத் தாக்குதலில் 3இஸ்ரேலியப்படையினர்பலி

### காஸாப்பகுதியில் சம்பவம்

நேற்று முன்தினம் காஸாப் பகுதியில் ரோந்து சென்ற இஸ்ரேலியப் படையினர் மீது சைக்கிளில் வந்த வெடிகுண்டு தாங்கிய தற்கொலைப் படையாளி மோதியதில், மூன்று இஸ்ரேலியப்படையினர் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து சந்தேகத்தின் பேரில் ஜிஹாத் இயக்க போராளிகளை தேடிக் கைது செய்வதில் பலஸ்தீனப் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் தாக்குதலுக்கு திட்டமிட்டவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என செய்திகள் தெரிவிக்கின்றன.



ஜனாதிபதியின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள பலபத்த பென்டி பதவிப்பிரமாணம் செய்து கொள்வதை மேலுள்ள படத்தில் காணலாம்

# மாற்றமடையா வெளிநாட்டுக்கொள்கை விரைவில் தயாரிக்கப்படும்

### வெளிவிவகார அமைச்சர், லக்ஷ்மன் கதிர்காமர்

(கொழும்பு)

காலத்துக்குக் காலம் மாற்றமடையாத வெளிநாட்டுக் கொள்கை ஒன்று விரைவில் அமைக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

நேற்று புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற பின் திருமதி சந்திரிகா குமாரதுங்கா தனது அமைச்சரவை சகாக்களுடன் கலந்து கொண்ட முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார். இவ்வாறான மாநாடுகள் தொடர்ந்தும் நடைபெறுமெனவும் அந்த தெரிவிக்கப்பட்டது.

### மண்ணெணயின் விலை ரூபா 2.50ஆல் குறையும்

மண்ணெண்ணெயின் விலை குடாநாட்டில் மேலும் குறைக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை ரூபா2 50 சதத்தால் வீழ்ச்சியடையுமென திட்டமிடல் பணிப்பாளர் திரு பதீமநாதன் தெரிவித்ததாக செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கிறது.

புலிகளுடனான இதனை நடைபெற்ற தேர்தல மூலம் வலியுறுத்தியுள்ளார்கள்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது சுலபமானதல்ல. பல்வேறு தடைகளையும் வென்றே இதனைச் சாதிக்க வேண்டும். சகல சமூகங்களையும் திருப்தி செய்யும் வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு ஏற்படுத்தப்படும்.

தேர்தலில் கிடைத்த வெற்றி, கடந்த 17 ஆண்டுகளாக நாட்டில் புரையோடிப்போன ஊழலுக்கும் அதிகார துஷ்பிரயோகத்திற்கும் எதிராக கிடைத்த வாக்கு மட்டுமல்ல. தமிழ்ப் போராளிகளுக்கும் அக்கறையுள்ள எவருக்கும் அளிக்கபபட்ட ஒரு செய்தியுமாகும்.

விரைவில் எமது அரசாங்கத்தின் விபரமான அரசியல் பொருளாதார கொள்கைகளை வெளியிடுவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு, உள்நாட்டு பத்திரிகையாளர்கள் கலந்து கொண்ட இம்மாநாட்டில் அமைச்சர்கள தர்மசிறி சேனநாயக்கா, அனுருத்தரத்வத்த, பேராசிரியர் ஜி. எல். பீரிஸ், லக்ஷ்மன் கதிர்காமர், சிறிமணி அத்துலத்முதலி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

### கலந்துரையாடல்

வலிகாமம் கிழக்கு வலிகாமம் மேற்கு வலயங்களில் உள்ள சகல விளையாட்டுக் கழகங்களின் நிர்வாக உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று பி. ப 3.00 மணிக்கு சுண்ணாகம் வலி கோட்ட அரசியல் துறைச் செயலகத்தில் நடைபெறவுள்ளதால் சகல விளையாட்டுக் கழக நிர்வாகிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறுயாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக் கொள்கின்றது.

## முதனிலை, இளநிலைத் தேர்வுகள்

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் நடாத்தும் முதனிலை, இளநிலைத் தேர்வுகள் முறையே 14-11-94 திங்கட்கிழமையும், 15-11-94 செவ்வாய்க்கிழமையும் ஆரம்பமாகின்றன.

முதன் நிலைத் தேர்வுக்கான நேர அட்டவணை

| நாள் | மு ப.8.30-9.30 | மு.ப.10.00-11.00 | மு.ப 11.30 பி.ப 12.30 |
|---|---|---|---|
| 14-11-94 திங்கள் | தமிழ் மொழி | ஆங்கிலம் | சமயம் |
| 15-11-94 செவ்வாய் | கணிதம் | சுற்றாடல் | — |

இத் தேர்வு நாடிகள் வினாத்தாளிலேயே விடையளித்தல் வேண்டும்.

இள நிலைத் தேர்வு முன்னர் வழங்கப்பட்ட நேர அட்டவணைப்படியே நடைபெறுமென்றும் இத் தேர்வு நாடிகள் அனைத்துப் பாடங்களினதும் இரண்டாம் பகுதிக்கு விடை எழுத எழுதுதாள்களையும், சித்திரப் பாடத்திற்கு சித்திரத் தாள்களையும் தேர்வு நாடிகள் கொண்டு செல்ல வேண்டுமென்று இத் தேர்வுக்கு நியமிக்கப்பட்ட தேர்வு நிலைய மேற்பார்வையாளர்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு சமுகம் கொடுத்து பிரதிக் கல்விப் பணிப்பாளரிடம் வினாத் தாள்களைப் பெற்று தேர்வினை உரிய நேரத்திற்கு நடத்த சகலரது ஒத்துழைப்பையும் தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார்


5 வது வெற்றி வாரமாக

யாழ். ஸ்ரீதர் அகலத்திரையில்

முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து வழங்கும்

பொ. தாசனின்

**"இன்னும் ஒரு நாடு"**

தினசரி பிற்பகல் 2-30, 4-00, 6-00

சனி, ஞாயிறு காலை 10-30, 4-30, 6-30

சனி, ஞாயிறு 2.30 மட்டும்

ஓகஸ்ட் '94 ஒளிவீச்சு காண்பிக்கப்படும்.

(சி-10697)



தமிழீழ நிர்வாக சேவை, வேலைப் பகுதி

**பதவி வெற்றிடங்கள்**

தொழில்நுட்பவியலாளர் தரம் III க்கான நேர்முகப் பரீட்சை தமிழீழ நிர்வாக சேவை செயலகத்தில் நடைபெறவுள்ளது. தகுதியானவர்கள் நேரில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

காலம்: 14 - 11 - 1994 திங்கள் 9மணியில் இருந்து 12. 00 மணிவரை
15 - 11 - 1994 செவ்வாய் 9. 00 மணியில் இருந்து 12 மணிவரை

தகுதி: தேசிய தொழில் நுட்பவியல் தேர்வு (N C. T.) (தொழில் நுட்பக் கல்லூரி) குடிசார் பொறியியல் தேர்ச்சி பெற்ற அல்லது பரீட்சைக்குத் தோற்றியவர்கள்.

சான்றிதழ்களும், அத்தாட்சிகளும் பின்னர் சமர்ப்பிக்கப்படலாம்.

இடம்: தமிழீழ நிர்வாக சேவை,
தமிழீழம்,
கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பொறுப்பாளர்
தமிழீழ நிர்வாக சேவை;

(சி-10699)


மலர்ச்சி தொடங்கொட வெற்றிலை கொடுத்து சம்பிரதாயபூர்வமாக வரவேற்று அழைத்துச் செல்ல ஜனாதிபதியின் செயலாளர் கே. எச். ஜே. விஜேதாச பின்தொடர்ந்து சென்றார்.

பலத்த கடற்படை பீரங்கிப் படகு ஒன்று அங்கும் இங்கும் நகர்ந்து கொண்டிருந்தது

இதே சமயம் பதவி ஏற்பு மண்டபத்தினுள் உறவினர்கள் இராஜதந்திரிகள் மந்திரிகள் என தெரிவு செய்யப்பட்ட சிலரே அனுமதிக்கப்பட்டபோதும் அவர்கள் அனைவரும் முழுமையாக சோதிக்கப்பட்டனர்,

தமிழீழ இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் விபரங்கள் நாளை முதல் ஈழநாதம் தினசரியில் வெளிவரவுள்ளது இதேவேளை 90, 91, 92, 93ஆம் ஆண்டுகளில் மீளளிப்பிற்கென தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் இதுவரை மீளப் பெறாதவர்களும் உரிய ஆவணங்களைக் கையளித்து அவர்களின் கடனை 94 மாவீரர் வாரத்தில் மீளப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் நிதித் துறையினர் அறிவித்துள்ளனர்.

ஜனாதிபதியாக லாளர் கே எச். ஜே. விஜேதாசா அறிமுக உரையை நிகழ்த்தினார்.

அவரது உரையைத் தொடர்ந்து சரியாக 11-00 மணிக்கு பதவிப் பிரமாணமும் தொடர்ந்து மும்மொழிகளில் சத்தியப் பிரமாணமும் இடம்பெற்றது. சத்தியப் பிரமாண வைபவத்தை அடுத்து முப்படையினரும் வழங்கிய அணிவகுப்பு மரியாதையை திருமதிசந்திரிகாகுமாரதுங்கா ஏற்றுக் கொண்டார்.

காலிமுகத்திடலில் இருந்து கடற்படையினர் இருபத்தியொரு மரியாதை பீரங்கி வேட்டுக்களையும் தீர்த்தனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நடந்த இப்பதவியேற்பு வைபவத்தில் வெளிநாட்டு இராஜதந்திரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், அரசாங்க உயரதிகாரிகள், வெளிநாட்டு உள்நாட்டு பத்திரிகையாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

திருமதி சந்திரிகா குமாரதுங்காவின் தாயாரும் இலாகாப் பொறுப்பற்ற அமைச்சருமான சிறிமாவோ பண்டாரநாயக்கா, சகோதரி சுனேத்திரா நாணயக்கார, சந்திரிகா குமாரதுங்காவின் மகளான யசோதரா, மகன் விமுக்தி ஆகியோரும் இந்நிகழ்வுக்கு வருகை தந்திருந்தனர்.

ஜே. ஆர் ஜனாதிபதி செயலகத்தில் பதவியேற்றுக் கொண்ட வைபவத்தில முன்னாள் ஜனாதிபதிகள் ஜே ஆர்.ஜெயவர்த்தனாவோ, டி. பி. விஜேதுங்காவோ கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சுற்றுலாத் துறை அமைச்சர் தொண்டமான் காலதாமதமாகவே இந்நிகழ்விற்கு வருகை தந்தார்,

குதிரைப்படை புறப்பட்டார்.

இக் குதிரைப்படை வீரர்கள் தமது கைகளில் சிங்கக் கொடியை ஏந்தி இருந்தனர் இக் கொடியின் பின்புறம் தேசியக் கொடியில் இருந்த சிங்கத்தை மட்டும் கொண்டதாகவும் தேசியக் கொடியில் இனங்களை குறிப்பதற்காக இருக்கும் இரு நிற பட்டிகளும் ஆங்கில 'வி' வடிவத்தில் (V) அமைக்கப் பட்டிருக்க காணப்பட்டது

ஜனாதிபதி பதியின் செயலகத்தில் நியமனம் வழங்கப்பட்ட உடனேயே அவர்பதவிஏற்றுக்கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பலபத்தபென்டி முன்னாள் பிரதமரின் செயலராக இருந்தமையும் யாழ். வந்த அரச தரப்பு குழுவின் தலைவராக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



பதவியேற்பு வைபவத்தின் பின் நடைபெற்ற சமயச் சடங்கொன்றில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கலந்து கொள்வதை மேலுள்ள படத்தில் காணலாம்


### மண்ணெயில் நீர் கலப்படம்

(வடமராட்சி)

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தண்ணீர் கலப்படம் செய்த மண்ணெண்ணெயை வழங்கி வருகின்றனர்

கட்டைவேலி புலோலி பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்கள் மூலமாக வழங்கிய மண்ணெண்ணெயிலேயே இக் கலப்படம் செய்யப்பட்டுள்ளது. இறுதியாக வழங்கப்பட்ட நான்கு லீற்றர் மண்ணெண்ணெயில் தண்ணீர் 50வீதம் இருப்பதாக பாவனையாளர்கள் புகாரிடுகின்றனர் (போ]

### 1 ஆம் ஆண்டு நினைவலைகள்



**கப்டன் மணிவண்ணன் (வைத்தி)**
**(எலியாஸ் சுரேஸ்குமார்)**

நாவாந்துறை

வென்று வாவென விட்டுநாம் இருந்தனம்
விடியும் வேளையோர் இடிவிழுந்தது
வண்ண மேனியுன் களத்தில் வீழ்ந்ததென்(று)
வந்து சேதியொன் றெம்மை இடித்தது
இன்று நீயிலை என்றுவோர் ஆண்டது
எம்மை விட்டுமே ஓடி மறைந்தது
சென்றவா எம் தோழன் வைத்தியே!
சோகம் சொல்லவோர் வார்த்தை இல்லையே!

3-ம் குறுக்குத் தெரு,
நாவாந்துறை,

- குடும்பத்தினர்,
நண்பர்கள்

(10099)

## மரண அறிவித்தல்கள்

### சிவசுப்பிரமணியம் சிவபாக்கியம்

கேலவண 5-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 27/11 ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் சிவபாக்கியம் 12-11-94 அன்று அதிகாலை காலமாகிவிட்டார். இவர் நாகலிங்கம் சிவகாமிப்பிள்ளையின் அன்பு மகளும், சின்னத்தம்பி தங்கமுத்துவின் மருமகளும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், கந்தசாமி (சுந்தரஞானி - யாழ் போதனா வைத்திய சாலை), தவராஜா (கனடா), சிவப்பிரகாசம் (கணக்காளர் சவூதி அரேபியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மாவதி, தனலக்ஷ்மி, கங்கேஸ்வரி, மகாதேவி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், இராசலிங்கம், கனகம்மா ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார், இவர் விஜித்தா (யாழ். மருத்துவ பீடம்), சிவதனுஜா, செந்தூரன், இளந்திரையன், யசோதரா, சிவாஜினி, லோகப்பிரகாஷன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் துண்டி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்

தகவல்:
சு.கந்தசாமி
(யாழ். போதனா வைத்தியசாலை)

(10100)

### திரு. ஆறுமுகம் சிவபாதசுந்தரம்

(ஓய்வுபெற்ற தட்டெழுத்தாளர்)

கட்டைப்பிராயில் வசித்த ஆறுமுகம் சிவபாதசுந்தரம் அவர்கள் 8-11-94 செவ்வாய்க்கிழமை அவுஸ்திரேலியாவில் காலமாகிவிட்டார். இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும் யோகேஸ்வரன், விக்னேஸ்வரன், திருமதிகள் யோகமலர் - பேரின்பநாயகம், புஷ்பலீலா-அருந்தவராசா, விஜயராணி - சிவராஜா, பவானி-முருகானந்தன், இந்திராணி - சர்வானந்தன், ரேவதி-ஸ்ரீரஞ்சன், கலாவதி - சிவகுமார் ஆகியோரின் அன்புத் தகப்பனாருமாவார்; அன்னாரது பூதவுடல் 14-11-94 திங்கட்கிழமை அவுஸ்திரேலியாவில் தகனஞ்செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்;

தகவல்
ச. பேரின்பநாயகம்
(மருமகன்)

V. H. லேன்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(10083)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது